www.eelamview.com

விடுதலைப்புலிகள்

குரல்: 88 மாசி - பங்குனி 1999 அன்பளிப்பு 5/=

☆ சுதந்திரக் கனவுகளின் புறப்பட்டவனின் செய்தி
☆ ஆட்பணிஅறிவிப்பின் அவசியம்
☆ இல்லாத ஓவியரின் கருத்துமாற்றம்
☆ பிரபாகரனுக்கு வெற்றி உண்டாகட்டும்
☆ நிலன் - பிலன் - ந
☆ வெறியாட்டும் படலம்
☆ கலைக்களம்

சிங்களப் படைகளின் நாசகாரத் திட்டம்

இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளான மணலாறு- வவுனியா- மன்னார் மாவட்டங்களில் சிங்களக்குடியேற்றங்களை நிறுவ சந்திரிகா அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இந்த ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இருந்து தமிழர்கள் உயிர்காப்பிற்காக இடம்பெயர்ந்தோடிய செயலை சிங்களப்பேரினவாதம் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றது.

இத்தகைய குடிபெயர்ப்பிக்கலைப்பு மூலம் மணலாற்று மண்ணின் பெரும்பகுதியில் வெலிஓயா என்ற பெயரில், ஏற்கவே சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டுவிட்டன. அந்தக் குடியேற்றங்களுக்கு அருகே இருக்கின்ற தமிழரின் வயல்களையும் காணிகளையும் சிங்களவருக்கு பகிர்ந்தளிக்க படையினர் முயல்கின்றனர்.

அத்துமீறிய சிங்களக்குடியேற்றம் என்ற தமிழர்தரப்பின் குற்றச்சாட்டு உலக அரங்கில் நிரூபணமாகாமல் இருப்பதற்காக தனது குடியேற்ற முயற்சிகளுக்கு, சிங்கள அரசானது பல வேறு பெயர்களைச் சூட்டியுள்ளது.

ஆரம்பத்தில், விவசாயக்குடியேற்றங்கள் என்ற பெயரில் சிங்களக்குடியேற்றங்களை தமிழர் நிலத்தில் நடாத்தியது. முடிக்குரிய காணிகளை மக்களுக்கு பகிர்ந்தளித்தல் என்ற போர்வையில் தமிழினத்தின் முடிக்குரிய நிலங்களை கையகப்படுத்திய சிங்கள அரசாங்கம் அவற்றை சிங்களவர்களுக்கு பகிர்ந்தளித்தது. பின்னர் காலஓட்டத்தில், அவற்றின் அருகே இருந்த தமிழர் கிராமங்கள் குடிபெயர்ப்பிக்கலைக்கப்பட்டு அவையும் சிங்களக்குடியேற்றங்களாக மாற்றப்பட்டதற்கு ஏராளமான உதாரணங்கள் உண்டு.

அதன்பின்னர், தொழிலாளர்களுக்கு குடியிருப்புகளை அமைத்தல் என்ற கோதாவில் வடக்கு- கிழக்கில் உள்ள தொழில் நகரங்களிலும் (திருகோணமலை- அம்பாறை) கரையோரப் பகுதிகளிலும் (கொக்கிளாய்- நாயாறு) சிங்களவர் குடியமர்த்தப்பட்டனர்.

இப்போது, படைமுகாம்களின் பாதுகாப்பிற்காக என்ற ரீதியில் தமிழர் நிலத்தில் சிங்களக் குடியேற்றங்களை அமைக்க, அரசாங்கம் முயல்கின்றது.

பலாலி படைத்தளத்தை சூழவுள்ள சுமார் 40 ச கி.மீற்றர்கள் பரப்பளவான பகுதியை அபகரித்து- அதை சிங்களவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் முயற்சி ஒன்று அண்மையில் அம்பலமாகி இருந்தது; அந்த நாசகாரமுயற்சிக்கு ஏற்பட்ட பலத்த எதிர்ப்புக் காரணமாக முயற்சியை கைவிடும்படி சந்திரிகா அம்மையார் அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

உலகத் தொடர்பு சாதனங்களின் பார்வையில் சதா தென்பட்ட வன்னைமுள்ள குடாநாட்டின் மையத்திலேயே சிங்களவர்களைக் குடியமர்த்த அரசு முயற்சிக்கின்றது என்றால், வன்னி-மன்னார் பெருநிலப்பரப்பில் சிங்களப் பகுதிகளை அண்டியுள்ள தமிழர் நிலங்களை சந்தடியின்றி கபளீகரம் செய்வதற்கு அரசு எவ்வளவு தூரம் முயற்சிக்கும் என்பதை ஊகித்தறியலாம்.

ஆக்கிரமிக்கப்பட்ட நெடுங்கேணிப் பகுதியில் தமிழர் காணிகளை- வீடுகளை சிங்களவர் உபயோகிக்கத் தொடங்கி விட்டனர் என்ற செய்தி மக்கள் அறிந்ததே. இதேபோன்று, மன்னார் மாவட்டத்தில் முன்னர் ஏற்படுத்தப்பட்ட 'சஜவத்த' என்ற சிங்களக் குடியேற்றக் கிராமம் மீண்டும் படையினரின் ஆக்கிரமிப்பிற்குள் சென்றுள்ளது. இதிலே பழையபடி சிங்களவர்களைக் குடியமர்த்த படையினர் முயன்று கொண்டிருக்கின்றனர்.

தமிழர் நிலங்களை அபகரித்து அவற்றை சிங்கள மயமாக்குவது பேரினவாதத்தின் நீண்டநாள் ஆசை. இந்தக் குடியேற்றங்களைப் பயன்படுத்தி தமிழர் தாயகத்தின் நிலத்தொடர்பை சிதைக்கும் சூழ்ச்சியையும் பேரினவாதம் செய்கின்றது. அல்லை - கந்தளாய் மற்றும் கல்லோயா சிங்களக்குடியேற்றங்கள் - நில அபகரிப்புடன் கிழக்கு மாகாணத்தின் நிலத்தொடர்பை பிரித்தும் சிதைக்கும் நோக்கத்தையும் கொண்டவையாகும். இதேபோல, வடக்கு- கிழக்கின் நிலத்தொடர்பைத் துண்டித்து தமிழர் தாயகத்தைக் கூறுபோட மணலாறு குடியேற்றங்களை அரசு பயன்படுத்துகின்றது. குடாநாட்டை வன்னி நிலப்பரப்பில் இருந்து துண்டிப்பதற்காக ஆனையிறவு- வெற்றிலைக்கேணி நிலப்பரப்பில் பாரிய சிங்களக்குடியேற்றத்தை அமைக்கும் திட்டம் ஒன்றை பேரினவாத அமைப்பு ஒன்று பகிரங்கமாக வெளியிட்டிருந்ததையும் இங்கு நினைவுகூர வேண்டும்.

இந்த சிங்களமயப்படுத்தலால் அரசு சந்திக்க இருக்கும் சர்வதேச அழுத்தங்களிலிருந்து தன்னைப்பாதுகாப்பதற்காக ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் அபிவிருத்திப்பணி என்றும்- மக்கள் சேவை என்றும் கண்துடைப்பிற்காக சிலவேலைகள் செய்து உலகத்தை திசைதிருப்பி - தமிழ் மக்களையும் ஏமாற்ற, சந்திரிகா அரசாங்கம் முயல்கின்றது.

புலிகள் இயக்கத்தின் உருவாக்கமும் - வளர்ச்சியும்தான் வேகமாகப் பரவிவந்த சிங்களக்குடியேற்றங்களை எமது மண்ணில் தடுத்து நிறுத்தியது. சிலவற்றைக் குடிபெயர்ப்பிக் கலைத்திருந்தது. புலிகளின் இராணுவ பலத்தை அதிகரிப்பதன் மூலம் சிங்கள அரசு தற்போது முடுக்கிவிட்டுள்ள நிலக் கபளீகர முயற்சிக்கு தமிழ்மக்கள் தகுந்த பதிலடி கொடுக்க முன்வர வேண்டும். எமது இளைஞர்களும் இளம் பெண்களும் புலிகளுடன் இணைந்து- ஆயுதப்போரில் கலந்துகொள்வதன் மூலமே இதைச் சாதிக்கமுடியும். தவறினால் ஈழத்தமிழினத்திற்கு பேராபத்தை அது தேடிக்கொடுக்கும்.

தமிழர் நிலம்விழுங்க விரியும் பேரினவாதப் பெருவாயை கிழித்தெறியத் திரள்கிறது தமிழர்சேனை!

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

www.eelamview.com

www.eelamview.com

ஆட்பல அதிகரிப்பின் அவசியமும் பொருண்மியத்தேவைகளின் பெருக்கமும்

வன்னியில் நடைபெறும் மரபுப்போர் ஒரு புதிய கட்டத்திற்குள் சென்றுகொண்டிருக்கின்றது.

தமிழரின் இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு காணும் இலக்கில், சந்திரிகா அரசாங்கம் புதியதொரு போர்த்திட்டத்தை வன்னிச்சமர்க்களத்தில் அரங்கேற்றியுள்ளது.

புலிகளின் பலமான பகுதிகளுக்குள் ஊடுருவிச் சென்று புலிப்படையின் மரபுப்போர் ஆற்றலை நசுக்க சிங்களப்படைகள் எடுத்த முன்னைய முயற்சி தோல்வியில் முடிந்துவிட்டது. ஜயசிக்குறுயின் தோல்வியுடன் அந்தப் போர்த்திட்டம் மாற்றப்பட்டுவிட்டது.

இப்போது எதிர்ச்சமரை புலிகள் நடாத்தாத இடங்களை இலக்குவைத்து அவற்றை அரச படைகள் கைப்பற்றுகின்றன.

படையினரின் இப் புதிய போர்த்திட்டத்திற்கு இரண்டு பிரதான நோக்கங்கள் இருக்கின்றன.

ஒன்று, நிலங்களைக் கைப்பற்றி அதை அரசாங்கத்தின் அரசியல் (தேர்தல்) வெற்றியாக்குவது.

இரண்டு, சமர்அரங்கை நீட்டி - விரித்து புலிகளின் பலத்தை ஐதாக்கி மரபுப்போரில் சிங்களப்படைக்கு சாதகமான புறநிலையை ஏற்படுத்துவது.

இறுதியில் புலிகளின் பலமான பகுதிகளை குறிவைத்து ஒரு தீவிரமான பரபுச்சமரை - பலமுனைகளூடாக நடாத்துவது படைத்தலைமையின் திட்டம்.

அரசபடைகளின் இந்த ஆக்கிரமிப்புத் தந்திரோபாயத்திற்கு புலிகளிடமுள்ள ஆட்பற்றாக்குறை ஒரு அடிப்படைக் காரணியாக உள்ளது.

இந்த நிலையில், அரசபடைகள் விரிவாக்கிக் கொண்டுவரும் களமுனைகளில் காட்டமான வகையில் எதிர்ச்சமர் புரிவதற்கேற்ற போதிய ஆளணியை அவசரமாகப் பெற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம், புலிகள் இயக்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இந்த ஆட்தேவையை வழங்கி - புலிகளின் இராணுவபலத்தை உயர்த்த வேண்டிய வரலாற்றுக்கடமை எமது மக்களிடமே உள்ளது.

இதேவேளை, வன்னிச்சமர் நாளுக்குநாள் விரிவாக்கம் கண்டுவருவதனால், சிங்கள அரசு மேலும் - மேலும் தனது பொருண்மிய வளத்தை போருக்காக செலவிட்டுக்கொண்டிருக்கின்றது.

தனது பொருளாதாரபலத்தை போருக்குத் திருப்பிவிடும் கைங்கரியத்தைச் செய்யும் அதே வேளை, அத்தகைய பொருளாதார பலம் புலிகள் இயக்கத்திற்கு போய்ச்சேராமல் தடுப்பதிலும் அரசாங்கம் அக்கறை காட்டுகின்றது.

புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி மீது அரசாங்கம் விதித்துள்ள பொருண்மியத்தடைகளுடன், அங்கே எந்த ஒரு உற்பத்தி நடவடிக்கையும் நடைபெறாவண்ணம் உள்ளீட்டுப்பொருட்களுக்கு - உபகரணங்களுக்கு - மூலப்பொருட்களுக்கு. அது தடைவிதித்துள்ளது. இதன்மூலம் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் பொருண்மிய வளர்ச்சிகள் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்வதில், அரசு கவனமாக உள்ளது.

நில ஆக்கிரமிப்பிற்கு அப்பால், இராணுவ நடவடிக்கைகளின்போது படையினர் கண்மூடித்

Liberation Tigers Of
TAMIL EELAM
புலிகளின் குரல்

தனமான குண்டுத்தாக்குதல்களை நடாத்தி - மக்களை குடியெழுப்பிக்கலைத்து அவர்களின் குடும்பபொருளாதாரத்தை சிதைத்து வருகின்றனர். போராடும் மக்களின் குடும்பபொருளாதாரத்தைச் சிதைப்பதன்மூலம் போராட்டத்திற்கு தேவையான பொருண்மிய பலத்தை இல்லாது செய்யும் சதிச்செயலையும் - சிங்கள அரசு செய்துவருகின்றது.

இவற்றுடன் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் பாரிய இடப்பெயர்வுகளை ஏற்படுத்தி- அந்த அகதிப்பாரத்தை புலிகள் இயக்கத்தின் மீது சுமத்திவிடும் வேலையையும் சிங்கள அரசு திட்டமிட்டுச்செய்கின்றது. ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின்போதும் அல்லது படைத்தளங்களில் இருந்து குடியிருப்புகள்மீது வீசப்படும் எறிகணைத் தாக்குதல்களின்போதும் உயிர் காப்பிற்காக பல்லாயிரம் மக்கள் இடம்பெயரும் அவலம் நடக்கின்றது. இடப்பெயர்வாளர்களின் உடனடித்தேவைகளுக்கு, பெரும்பாலும் புலிகளின் பொருண்மிய வளம் பயன்படுத்தப்படுகின்றது. போருக்கென ஒதுக்கப்பட்டிருக்கின்ற வளத்தின் ஒரு பகுதி இடம்பெயர்ந்தோரின் பராமரிப்பிற்கென கரைவது புலிகளின் போர்ப் பொருளாதாரத்தில் தாக்கங்களை ஏற்படுத்தும் என்று அரசாங்கம் நம்புகின்றது.

இவ்விதம் சிங்கள அரசு திட்டமிட்டுச் செய்யும் பொருண்மிய நாசங்களுக்கு மத்தியில், போராட்டத்திற்கான பொருளாதாரத் தேவையும் பெருகிச்செல்கின்றது.

மரபுப்போரின் தீவிரம் காரணமாக படையினர்க்கு இணையாக புலிகளும் படைக்கலங்களை பயன்படுத்தவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது. படையினரின் படைநகர்வைத் தடுத்து நிறுத்த பெருமெடுப்பில் புலிகள் எறிகணைகளைப் பயன்படுத்துகின்றனர். பகைவனின் டாங்க் நகர்வுகளைக் கட்டுப்படுத்தி - நிலஆக்கிரமிப்பைத் தடுக்க பெறுமதிவாய்ந்த டாங்க் எதிர்ப்பு ஆயுதங்கள் உபயோகிக்கப்படுகின்றன. பெரும் செலவில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டு - பயன்படுத்தப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான போராளிகளின் உணவு - உடை - மருத்துவ தேவைகளை ஈடுசெய்ய, மாதாந்தம் - பலகோடி ரூபாய்கள் செலவாகின்றன. ஆயிரக்கணக்கான புதியபோராளிகளுக்கு பயிற்சி கொடுத்து - போருக்குத் தயார்படுத்த பெருமளவு நிதி தேவைப்படுகின்றது.

போராட்டத்திற்குத் தேவையான இந்த பொருண்மிய வளத்தை நல்கவேண்டிய வரலாற்றுக்கடமை எமது மக்களுக்குத்தான் உண்டு. இந்தத் தேசியக் கடமையை செய்யக்கூடிய நிலையில் தாயகத்தில் வதியும் எமது மக்கள் இல்லை என்பது அனைவரும் ஒப்புக்கொள்கின்ற விடயம். இந்தப் பொருண்மிய பலத்தை புலம்பெயர்ந்து வாழும் எமது மக்களே, புலிகள் இயக்கத்திற்கு வழங்கமுடியும். இந்த சக்தி புலம்பெயர்ந்த ஈழத்தவர்களுக்கு உண்டு.

புலம்பெயர்ந்த தமிழீழ மக்களை நோக்கி தலைவர் பிரபாகரன் - அண்மையில் - விடுத்த செய்தியில் போராட்டத்திற்கான பொருண்மியத் தேவையின் அவசியம் பற்றி வலியுறுத்தி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலக விடுதலைப் போராட்ட வரலாறுகளில் புலம்பெயர்ந்த அந்த இன மக்களின் பொருண்மியப் பங்களிப்பு மிக முக்கிய இடத்தை வகித்திருப்பதைக் காணமுடியும். புலம்பெயர்ந்த எமது மக்களின் பொருண்மியப்பங்களிப்பு அண்மைக் காலங்களில் பெருகியிருப்பது மகிழ்ச்சி தரும் செய்தி எனினும், தீவிரம் பெற்றுவரும் இன்றைய போரின் தேவைகளுக்கு ஏற்றவகையில். இது மேலும் - மேலும் பங்களிப்பாக பெருக வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இன்றைய நிலையில், தமிழர் சேனையான புலிப்படையின் ஆட்தொகை அதிகரிப்பும் - போராட்டத்திற்கான பொருண்மிய உதவிகளின் பெருக்கமும்தான் சிங்களப்படைகளுடனான போரின் தலைவிதியைத் தீர்மானிக்கும் முக்கிய விடயங்களாக இருக்கின்றன.

போருக்கு வேண்டிய பொருண்மியத் தேவைகளை ஈடுகட்ட வேண்டிய வரலாற்றுக்கடமை புலம்பெயர்ந்த ஈழத்தவர்களுக்கு உள்ளது போல; போரிற்குவேண்டிய அதிகரித்த ஆட்தேவையை நிவர்த்திசெய்யவேண்டிய - தட்டிக்கழிக்கமுடியாத வரலாற்றுக்கடமை தாயகத்தில் வாழும் இளைஞர் - இளம்பெண்களுக்கே உள்ளது.

தேசம் நெருக்கடிகளைச் சந்திக்கும் வேளைகளில் தத்தமது தேசியக்கடமைகளை சரிவரச் செய்ய முன்வரும் மக்கள் இனம், நெருக்கடிகளை வென்று வரலாறு படைக்கும் என்பது மானிட வரலாறு கூறும் உண்மை.

(03ஆம் பக்கத்தொடர்ச்சி)

சந்திரிகா...

போராட்டத்தையும் நிராகரித்து - தன்னையும் ஒரு நடுநிலையான அரசியல் தலைவிபோல காட்டியுள்ளார்.

வேறு ஒரு கேள்வியில் " நீங்கள் இரண்டு பாதைகளை வைத்திருக்கின்றீர்கள் " என அம்மையாரை நோக்கி செவ்வியாளர் கூறுகின்றார். ஒன்று இராணுவப்பாதை என்றும் மற்றையது அரசியல்பாதை என்றும் - கேள்வியிலேயே விளக்குகின்றார்.

உண்மையில் இவ்விதம் இரண்டுபாதைகளை சந்திரிகா அரசாங்கம் கொண்டிருக்கவில்லை. இரண்டு வழிகள்போல தோற்றப்பாடு காட்டும் ஒரு பாதையைத்தான் அம்மையாரின் அரசாங்கம் அமைத்து வைத்திருக்கின்றது. போர்ப்பாதைதான் அது.போரை வெல்வதன்மூலம் சமாதானம் காண்பது என்பதே அம்மையாரின் அரசியல் சித்தாந்தம். புலிகளுக்கு இராணுவத்தீர்வு. தமிழ்மக்களுக்கு அரசியல்தீர்வு என்பது சர்வதேசத்தை ஏமாற்றும் ஒரு நாடகம். தமிழரின் இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு என்பதே அம்மையாரின் கொள்கை. போர்மூலம் புலிகளைத் தோற்கடித்துவிட்டால் தமிழரின் இனப் பிரச்சனைக்கு அரசியல்தீர்வு தேடத்தேவையில்லை என்பது சிங்கள அரசின் அந்தரங்கத் திட்டம்.

இந்தநிலையில், சந்திரிகா அரசாங்கம் பிரச்சாரப்படுத்திய இரண்டுபாதைத் தத்துவத்தை புறண்ட்லைன் ஆசிரியரும் ஏற்றுக்கொண்டு - அதைச் செவ்வியின் போது அம்மையாரிடமே ஒப்புவித்திருப்பது சிங்கள அரசாங்கத்திற்கு பக்கப்பாட்டுப்பாடியது போலுள்ளது.

அதேசமயம், இதே இதழுக்கு ரணில் விக்கிரமசிங்க வழங்கிய செவ்வியில் புலிகளின் போர்வலு உயர்ந்துள்ளது என்றும் மரபுப் போரை இப்போது புலிகள் டிவிசன் மட்டத்தில் நடாத்துகின்றனர் என்றும் புலிகளின் இராணுவ வளர்ச்சியை சுட்டிக்காட்டியுள்ளார்.

www.eelamview.com

www.eelamview.com

சந்திரிகா அம்மையாரின் புறண்ட்லைன் செவ்வி

ஒரு மதிப்பீடு

1999, ஜனவரி 01ம் திகதி வெளியாகிய புறண்ட்லைன் ஆங்கில சஞ்சிகை சந்திரிகா அம்மையாரின் நிழல்படத்தை முன் அட்டையில் தாங்கியவாறு - அவரது நீண்ட செவ்வியை உள்ளடக்கி - ஒரு சிறிலங்காச் சிறப்பிதழ் போல வெளிவந்திருந்தது.

தலைவர் பிரபாகரனின் மாவீரர் நாள் செய்தி தொடர்பாக இரண்டு விமர்சனக் கட்டுரைகளும் அந்த இதழில் இடம்பெற்றுள்ளன. அத்துடன் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் செவ்வியும் இடம்பெற்றிருந்தது.

சந்திரிகா அம்மையாரையும் - ரணில் விக்கிரமசிங்காவையும் இதழின் ஆசிரியர் ராம் அவர்கள் செவ்வி கண்டிருந்தார். இந்தியாவின் பிரபல நாளிதழ்களில் ஒன்றான இந்து பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் இவர்தான். ஜே. ஆர். - ராஜீவ் ஒப்பந்த உருவாக்கலில் இவரின் பங்கும் குறிப்பிடும்படியாக இருந்தது.

ஒப்பந்தம் தோல்விகண்டதனால் புலிகள் இயக்கம் மீது கோபம்கொண்டு - புலிஎதிர்ப்புப் பிரச்சாரத்தை தனது வெளியீடுகளில் நடாத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. புறண்ட்லைனுக்காக அம்மையாரிடம் பெற்ற செவ்வியும் - அந்த இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ள தலைவரின் மாவீரர்நாள் செய்தி தொடர்பான இரண்டு எதிர்வினைக் கட்டுரைகளும் இந்தப் பிரச்சார நோக்கை புலப்படுத்துகின்றன.

சந்திரிகா அம்மையாரின் இமேஜை உயர்த்துவதன்மூலம் புலிகள் இயக்கத்தை சிறுமைப்படுத்தலாம் என்ற உத்திமுறை நேர்காணலின் தந்திரமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆயினும், ரணில் விக்கிரமசிங்காவிடம் கேட்கப்பட்ட புலிகள் இயக்கம் பற்றிய மற்றும் போர்க்கள நிலைமை தொடர்பான வினாக்களுக்கு புலிகளது வல்லமை வளர்ச்சியை ஏற்றுக்கொள்ளும் வகையில் பதிலளித்து உண்மை நிலவரங்களை அவர் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

அம்மையாருடனான நேர்காணலில் - ராம் அவர்களின் கேள்விகள் பெரும்பாலும், நீண்டதாகவும் - வலிந்து புலிவெறுப்பு திணிக்கப்படுவதாகவும் உள்ளபோது. அம்மையாரின் பதில்கள் சிறியதாகவும் - கேள்விகளுக்கு பக்கப்பாட்டுப் பாடுவதாகவும் உள்ளன. சில பதில்கள் கேலிக்குரியதாகவுள்ளன. சொல் ஒன்று செயல் ஒன்று என்ற அவரது குணவியல்பு பல பதில்களில் வெளித்தெரிகின்றது.

பொதுசன ஐக்கிய முன்னணியின் நான்குவருட ஆட்சிச்சாதனை பற்றிய கேள்விகளுக்கு "சிறிலங்காவில் ஒரு ஜனநாயக அரசாங்கம் இருக்கின்றது என்று நிரூபித்துள்ளோம்" என அம்மையார் பதிலளித்துள்ளார்.

ஜனவரி 01இல் வெளிவந்த புறண்ட்லைனில் அம்மையாரின் கருத்து மேற்குறித்தவாறு பதிவாகியிருக்க, அதே ஜனவரி 20ம் நாள் வடமேல் மாகாணசபைத் தேர்தலில் அம்மையாரின் கட்சியினரும் - அவரின் மந்திரிமாரும் செய்த அராஜகச் செயல்கள் அவரின் ஜனநாயக தம்பட்டத்தை நகைப்பிற்கிடமாக்கிவிட்டன. ஜனநாயக வேடம் தரித்த அடக்குமுறை ஆட்சிதான் அம்மையாரின் ஆட்சி என்ற புலிகளின் கருத்து இங்கும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

உலகசமூகம் போற்றிக் கௌரவிக்கும் ஜனநாயக தத்துவத்தை - மனிதாபிமானக் கண்ணோட்டத்தை - சமாதான வாழ்க்கையை தனது அரசாங்கமும் நடைமுறைப்படுத்த திடசங்கற்பம் பூண்டுள்ளது என்று பிரச்சாரப்படுத்தி அம்மையார் சம்பாதித்த பெரும் - புகழும் பிரமாண்டமானது.

ஆனால் நடைமுறையில் அவரது நான்கு வருட ஆட்சி எதைச் சாதித்தது?

சமாதானத்திற்கானபோர் என்ற போர்வையில் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை தமிழ் மக்கள்மீது நடைமுறைப்படுத்தியும் - மோசடித் தேர்தல்களை நடாத்தியும் - அரசியல் படுகொலைகளை புரிந்தும் ஒரு கொடுங்கோல் ஆட்சியை நடாத்தியுள்ளார்.

உண்மைநிலை இவ்வாறிருக்க புறண்ட்லைன் ஆசிரியர் ராம் அவர்கள் - செவ்விக்கு முன்னுரையாக - அம்மையாரின் ஆளுமைப்பண்புகளை இவ்வாறு புகழ்ந்து தள்ளியுள்ளார்.

"சந்திரிகா பண்டாரநாயக்காவை பெருமைபிடித்த பெண்மணி என்றும் — கடுமையானவர் என்றும் சிலர் விமர்சிக்கலாம். ஆனால் புலிகளுக்கு எதிரான போர் என்ற வரையறைக்கு அப்பால் அவருடைய அரசாங்கம் வன்முறையைக் கடைப்பிடிக்கின்றது என எவருமே குற்றம்சாட்டமாட்டார்கள்" என எழுதியுள்ளார்.

போர்நிகழும் தமிழர்நிலத்திற்கு அப்பால் உள்ள குருநாகல் - புத்தளம் மாவட்டங்களை உள்ளடக்கிய வடமேல்மாகாண சபைக்கான தேர்தலின்போது சந்திரிகாவின் அமைச்சர்களே வன்முறைக்கு தலைமை தாங்கினரே!

அரச வன்முறையை கண்டித்து மதகுருக்கள் - பத்திரிகைகள் மற்றும் நடுநிலை அமைப்புக்கள் குரல்கொடுத்தன. தேர்தல் முறைகேடுகளில் தனது கட்சியினர் ஈடுபட்டனர் என்று ஒப்புக்கொண்டபோதும் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக அம்மையார் நடவடிக்கைகள் எடுத்திருந்தாரா!

உண்மைநிலை இவ்வாறிருக்க அம்மையார் பற்றிய செவ்விகண்டவர் தொடுத்த புகழ்மாலை நடுநிலையானதா! சூழ்ச்சி நோக்கம் அற்ற மதிப்பீடா!

தனது நான்குவருட ஆட்சிச்சாதனையாக இன்னுமொரு கருத்தையும் அம்மையார் கூறியுள்ளார். "இலங்கையானது ஒற்றையாட்சி அலகுமுறையை கொண்டிருக்கத்தேவையில்லை என்பதை எமது அரசாங்கம் ஏற்றுக்கொண்டது எமது அடுத்த சாதனை." அதாவது குறிப்பிட்டளவு அதிகாரங்களை பகிர்ந்து வழங்கி சிறுபான்மையினரைத் திருப்திப்படுத்த முடியும் என்றுள்ளார்.

இலங்கைத்தீவு சிங்களவர்களுக்கே உரித்தானது என்பது மரபுவழிப் பேரினவாதிகளின் நிலைப்பாடு. இந்த அரசியல் நிலைப்பாட்டை ஒற்றை ஆட்சி அலகுமுறைமூலம் பாதுகாக்க அவர்கள் முயல்கின்றனர். ஆனால் இதே கோட்பாட்டை காலத்திற்கு தகுந்தமாதிரி வடிவமாற்றம் செய்து, அம்மையார் ஒரு நாடு - ஒரு மக்கள் என்ற நவபேரினவாதிகளின் நிலைப்பாட்டை எடுத்துள்ளார். அதிகாரப்பரவலாக்கல் திட்டம் என்ற போர்வையில் தமிழரின் தேசிய தனித்துவங்களை சிதைத்துவிட்டு - தமிழ் மக்களுக்கு நகரசபை அதிகாரங்களை வழங்க அம்மையார் திட்டமிட்டுள்ளார். அம்மையாரின் தீர்வுப்பொதி இதையே இலக்காகக்கொண்டுள்ளது. இது நடைமுறைக்கு வருமானால் ஒற்றையாட்சி அலகுமுறைமூலம் சிங்களவரின் அரசியல் மேலாண்மையை பாதுகாக்கவேண்டும் என்ற அவசியம் இல்லாது போகலாம். இதை மனதில்வைத்துத்தான் "இலங்கைக்கு ஒற்றையாட்சி அலகுமுறை தேவையில்லை" என்ற கருத்தை அம்மையார் உதிர்த்துள்ளார்.

இதேவேளை, அதிகாரப்பகிர்வு என்பது ஒரு ஆட்சியியல்சாதனை என அம்மையார் பிரகடனப்படுத்த விரும்பினால் அந்த "சாதனையை" மாகாணசபைகளின் உருவாக்கம் என்ற கோதாவில் ஜே. ஆரின் ஐ. தே. கட்சி அரசாங்கம் அதை முன்னரே சாதித்துவிட்டதே!

சாதனை என்று சொல்லிக்காட்ட அம்மையாரின் ஆட்சியில் எதுவுமே இல்லாததால் உலகசமூகம் மதிக்கும் சில அரசியல் சித்தாந்தங்களை - அரசியல் வழிமுறைகளை வெற்று வார்த்தைகளில் உரக்கப் பிரகடனப்படுத்திவிட்டு அவற்றை தான் நடைமுறைப்படுத்தி வருவதுபோல நாடகமாடுகின்றார்.

அம்மையாரின் இந்தப் போலி நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி - எதிர்க்கேள்விகள் தொடுக்கவேண்டிய நடுநிலைப்பத்திரிகையாளனின் தார்மீகக் கடமையைச் செய்ய செவ்விகண்ட பத்திரிகையாசிரியர் ராம் தவறிவிட்டார்.

"சிங்களம்மட்டும் என்ற பொறி - ஈழப் பொறி" என இரண்டு பொறிகளுக்குள் இலங்கை சிக்கியுள்ளது" என்ற கருத்தை கேள்வியாக்கிய ராம் அவர்கள் அது தொடர்பாக அம்மையாரிடம் அபிப்பிராயம் கேட்டார். உடனடியாகவே தலையாட்டி அக்கருத்தை ஏற்றுக்கொண்ட அம்மையார் தான் இரண்டுக்கும் எதிரானவர் என இலவசம்புகட்டுகிற அரசியல் தலைவிபோல கருத்துக்கூறியுள்ளார்.

சிங்களம் மட்டும் என்ற பொறிக்கு எதிர்வினையாகவும் - பதிலடியாகவும் பிறந்ததே ஈழப் பொறி என ஏற்றுக்கொண்டு கேள்விக்கணை தொடுத்த செவ்வியாளர் "இரண்டும் இலங்கை வரலாற்றின் துயரமான பக்கங்கள்" என பொத்தாம் பொதுவாக வரையறை செய்து - இரண்டும் அழிவுகரமானது என்ற கருத்தை மறைமுகமாக வெளிப்படுத்தியுள்ளார்.

- எல்லாளன் -

ஒரு ஆக்கிரமிப்பையும் அதற்கு எதிரான விடுதலைப்போரையும் இவ்விதம் ஏழுந்தமானமாக வரையறை செய்வது தவறானது - அரசியல் குருட்டுத்தனம் நிறைந்தது.

இந்த வகைப்படுத்தல் பாணியில் அமெரிக்கப் படைகளின் ஆக்கிரமிப்பையும் - அதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்த வியட்நாமியரின் விடுதலைப் போராட்டத்தையும் "வரலாற்றின் துயரமான பக்கங்கள்" என மொட்டையாகச் சொல்லமுயலுறால்; ஆக்கிரமிப்பாளர்களின் படையெடுப்பு முயற்சிகளும் - அதற்கெதிரான விடுதலைப்போராட்டங்களும் ஒரே அரசியல் பரிமாணத்தைக் கொண்டவை என்ற தவறான முடிவிற்கே இட்டுச்செல்லும்.

ஆக்கிரமிப்புக்கள் கண்டிக்கப்படுவதும் - அதற்கெதிரான போராட்டங்கள் ஆதரிக்கப்படுவதும் வரலாற்று வழமை. புறண்ட்லைன் ஆசிரியரின் இந்த வகைப்படுத்தல் வரலாற்றைப் பழிப்பதாகவுள்ளது. அத்துடன், தமிழரின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் விசமத்தனமான முயற்சியையும் கொண்டதாகவே உள்ளது.

இதேவேளை, "இரண்டும் தவறானது" என்ற அம்மையாரின் வர்ணிப்பு நாசகார நோக்கத்தைக்கொண்டது.

சிங்களம் மட்டும் என்ற நிலைப்பாடு சரியென்றும் - ஈழக்கோட்பாடு தவறு என்றும் கூற அம்மையார் ஒரு மரபுப்பேரினவாதியல்ல. அம்மையார் ஒரு நவபேரினவாதி. தனது பேரினவாத சிந்தனைகளை நாசூக்காகவும் - சாணக்கியமாகவும் நடைமுறைப்படுத்துபவர்.

சிங்களம் மட்டும் நிலைப்பாட்டை உலகம் ஏற்கமாட்டாது. ஈழக்கோட்பாடு அம்மையாரின் பேரினவாத வயிற்றில் புளியைக்கரைப்பது போன்றது. எனவே, இரண்டும் தவறானது என்று கருத்துக்கூறி உலகின் நற்பெயரையும் தன்பக்கம் சேர்த்து - தமிழரின் விடுதலைப்

(02 ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

www.eelamview.com



இனவாத ஓவியரின் 'கருத்துமாற்றம்'

கடந்த மாவீரர் நாளன்று புலிகள் இயக்கத்தின் வானூர்தி ஒன்று முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம்மீது பறந்து - கல்லறைகளுக்கு மலர் தூவி வீரவணக்கம் செலுத்தியிருந்தது.

பெருந்தொகையான மக்களின் முன்னிலையில் நடைபெற்ற இந்த பலவளர்ச்சியின் வெளிப்பாட்டை கண்ணாரக் கண்ட எமது மக்கள் புளகாங்கிதம் அடைந்தனர்.

இந்த வரலாற்றுச் செய்தியை புலிகளின் குரல் வானொலியும் - ஈழநாதம் நாளிதழும் வெளியிட்டிருந்தன.

இதைத் தொடர்ந்துவந்த சிலநாட்களில் (டிச . 06 . 1998) கொழும்பில் வெளியான 'ஐலண்ட்' ஆங்கில நாளிதழ் இங்கு மறுபிரசுரமாகியுள்ள காட்டூனை பிரசுரித்திருந்தது.

ஐலண்டின் நீண்டகாலக் காட்டூன் வரைஞரான விஜயசோம என்பவரால் இது வரையப்பட்டிருந்தது. இவர் ஒரு தீவிர சிங்களப்பேரினவாதி. இவரின் காட்டூன்கள் அவரது இனவாத சிந்தனைகளை அப்பட்டமாகக் காட்டிநிற்கின்றன. தமிழரின் விடுதலைப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையிலும் - போர் தொடர்பாக சிங்களமக்களுக்கு உற்சாகமூட்டி நம்பிக்கை கொடுப்பதும் இவரது காட்டூன்களின் ஒரு பணியாகும்.

புலிகள் இயக்கத்தை உருவகப்படுத்த (படத்தில் உள்ளதுபோல) ஒரு புலியை இவர் குறியீடாக வரைவார். அந்தப் புலியை தமிழ்ப்புலி என்று காட்ட அதன் நெற்றியில் பொட்டுவைப்பார். இந்தப்புலியை எப்போதுமே காயம்பட்ட புலியாகவே வரைவார். தலையில் பிளாஸ்ரர் போட்டபடி அல்லது ஒரு கையில் காயக்கட்டுப் போட்டபடி மறுகையால் துப்பாக்கி ஒன்றை தூக்கியபடி அல்லது காலில் பந்துக்கட்டி ஒரு ஊன்றுகோலை -சில வேளைகளில துவக்கே ஊன்றுகோலாக' புலி வைத்திருப்பதுபோல வரைவார்.

இந்தக் காட்டூன்களின்மூலம் பல்வேறு வகையான இராணுவ - அரசியல் தந்திரோபாயக் கருத்துக்களை ஐலண்டின் வாசகர்களுக்கு கொடுப்பார்.

இவரது காட்டூன்கள் புலியை (இயக்கத்தை) ஒருபோதுமே நம்பக்கூடாது என்றும், புலி என்ன சொன்னாலும் அது ஏமாற்றுத்தந்திரம் நிறைந்தது என்றும் போரைத் தொடர்ந்து நடாத்தி பலவீனப்பட்டுக்கொண்டு போகும் புலியை முற்றுமுழுதாக அழிக்கவேண்டும் என்றும் போதிக்கும்.

புலிகள் இயக்கம் சமாதானம் பற்றிப்பேசினால் அதைப் பலவீனத்தின் வெளிப்பாடாக, விஜயசோமாவின் காட்டூன் புலப்படுத்தும்.

படுகாயம்பட்டு பங்கருக்குள் வீழ்ந்துகிடக்கும் புலி படுத்திருந்தபடி பதுங்குகுழிக்கு மேலால் ஒரு கிழிந்த வெள்ளைக்கொடியை தூக்கிக்காட்டுவதுபோல காட்டூன் வரைவார். அதாவது அழிவிலிருந்து தப்புவதற்காக புலி சமாதான சமிக்கையை ஒரு தந்திரமாக பயன்படுத்துகின்றது என்பது இவரின் முடிந்தமுடிபு.

சில சந்தர்ப்பத்தில், ஒரு குகைக்குள் ஒழிந்திருந்தபடி தனது உருவத்தை வெளியில் காட்டாதபுலி, அதன் வாலையும் வாலில் கட்டப்பட்டுள்ள வெள்ளைக் கொடியையும் மட்டுமே வெளியில் காட்டியபடியிருக்கும் காட்டூனையும் வரைவார். சமாதானம் என்பது புலிசெய்யும் வெறும் பாசாங்கு என்று காட்டவே இப்படி வரைவார்.

கடந்த மாவீரர்நாள் செய்தியில், தலைவர் அவர்கள் ஆக்கபூர்வமான சமாதானப்பேச்சிற்கான அழைப்பொன்றை தெட்டத்தெளிவாக விடுத்திருந்தார். அன்றுதான் புலிகளின் வானூர்தி ஒன்று பகிரங்கமாக வானில் தோன்றியது. இந்தச் செய்தி சிங்களவர்களை திகைப்பில் ஆழ்த்தியது. இனவாத காட்டூனிஸ்ற்றான விஜயசோமவையும் அந்தச்செய்தி பாதித்துள்ளது. போர் தொடர்பாக சிங்களவரை உற்சாகப்படுத்தும் தனது வழமையான பாணியைக் கைவிட்டுவிட்டு சிங்களவரைமிரட்டுவதுபோல ஒரு காட்டூனை வரைந்திருந்தார். அதுதான் இங்கே பிரசுரமாகியுள்ளது.

முப்படைகளையும் கொண்ட பலம்மிக்க ஒரு மரபுப்படையாக புலிகள் இயக்கம் வளர்ந்துவிட்டது என்பதை காட்டூன் காட்டுகிறது.

கடலில் புலிக்கொடி தாங்கிய கடற்புலிப் படகுகள் தங்கு தடையின்றி விரைவதுபோலவும்;

மேலே பறக்கின்ற வானூர்தி (புலிகளின் வான்படை) வரிப்புலிக் கோடுகளுடன் தடுப்பாரின்றிப் பறப்பதுபோலவும்;

பலமான தரைப்படையைக் காட்ட பாரிய பீரங்கிக்குழல் வாயும் இந்தக் காட்டூனில் வரையப்பட்டுள்ளன.

பீரங்கிக்குழல் மீது புலி கம்பீரமாக உட்கார்ந்திருக்கின்றது. வழமைபோல புலியின் உடலில் காயத்தழும்புகள் இல்லை. வாலில் வெள்ளைக்கொடி ஒய்யாரமாகப் பறக்கின்றது. மேலிருக்கின்ற புலி சொல்கின்றது

"NOW I AM READY FOR TALKS" (இப்போது, நான் பேச்சுவார்த்தைக்கு தயாராகவுள்ளேன்).

புலிகள் பலமான நிலையில் இருந்தபடி பேசவருகின்றனர் என காட்டூன்வரைஞர் தனது கைவண்ணத்தால் சொல்லியுள்ளார்.

இந்தக் காட்டூன் சிங்களமக்களுக்கு போர்க்கள யதார்த்தத்தைப் புகட்டியிருக்கலாம். அத்துடன் அவர்களை மிரட்டியும் இருக்கலாம்.

ஆனால், இந்த காட்டூனிஸ்ற் மீண்டும் தனது இனவாத சித்தாந்தத்தை பரப்புரை செய்யும் காட்டூன்களை வரையமாட்டார் என்று சொல்லமுடியாது.

www.eelamview.com

www.eelamview.com

"பிரபாகரனுக்கு வெற்றி உறுதிப்படும்"

- வே. பாலகுமாரன் -

கொழுகொம்பாக நினைத்துத்தான் அம்மையார் வடமேல் மாகாணசபைத் தேர்தலை நடாத்தினார். ஆனால் அது இன்று கொத்தும் பாம்பாகிவிட்டது. 25ம் திகதி காலை 7.00 மணிக்கு தேர்தல் தொடங்கி நாலு நிமிடத்திற்குள்ளே அம்மையாரின் நாலு வருட ஆட்சி முழுமையாக அம்பலப்பட்டது. 2500 ஆண்டு கால மகாவம்ச பயங்கரவாதிகளின் உண்மைச்சொரூபம் 25ம் திகதி முற்றிலுமாக வெளியாகியது.

அமெரிக்காவின் பதினாறாவது சனாதிபதியாக 1860 – 65 இடையில் பதவி வகித்தவர் ஏபிரகாம் லிங்கன். அவர் அப்போது கூறிய கூற்றொன்று மிகப்புகழ்பெற்றது. "சிலரை எப்போதும் ஏய்க்கலாம். எல்லோரையும் சிலவேளைகளில் ஏய்க்கலாம். ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏய்க்க முடியாது." அவரது பட்டறிவுப் பழமொழி இன்று புதுமொழியாக எவ்வளவு பொருந்தி வருகின்றது என்று பாருங்கள். இன்றைய எமது அரசியல் அகராதிப்படி "சிலரை" என்பது "எற்றிற்குரியர் (என்னத்திற்குரியவர்) கயவர் ஒன்று உற்றக்கால் (ஏதேனும் நடந்தால்) விற்றற்குரியர் விரைந்து" என்று வள்ளுவன் சொன்ன விற்றல் நிலையையும் தாண்டிவிட்டு, விற்பதற்கு தன்மானம் கூட அற்ற நிலையிலும் தமிழ் "லேபல்" ஒட்டிய தமிழ்க்குழுக்களைக் குறிக்கும். எல்லோரையும் என்பது அமெரிக்கா உள்ளிட்ட இதுவரை மனைவிழுங்கி மகாதேவன்களாக மெத்தனமாக இருந்த சருவதேசத்தையும் குறிக்கும். அப்படியானால் ஏய்ப்பவர் யாரென்பது நாம் சொல்லாமலேயே விளங்கும்.

இவ்வாறு திடீரென உலகிற்கு 'ஞானம்' உதிக்க காரணம் என்ன? அதுவொரு சிறிய தேர்தல்தான். ஆனால் அதன் விளைவுகளோ பாரிய தாக்கங்களை உருவாக்கிவிட்டன. கொழுகொம்பாக நினைத்துத்தான் அம்மையார் வடமேல் மாகாணசபைத் தேர்தலை நடாத்தினார். ஆனால் அது இன்று கொத்தும் பாம்பாகிவிட்டது. 25ம் திகதி காலை 7.00 மணிக்கு தேர்தல் தொடங்கி நான்கு நிமிடத்துக்குள்ளே அம்மையாரின் நாலுவருட ஆட்சி முழுமையாக அம்பலப்பட்டது. 2500 ஆண்டுகால மகாவம்ச பயங்கரவாதிகளின் உண்மைச்சொரூபம் 25ம் திகதி முற்றிலுமாக வெளியாகியது. 1981ஆம் ஆண்டு யாழ்மாவட்ட சபைத் தேர்தலில் அமைச்சர் காமினி தலைமையிலான காடையர் கூட்டம் 32 வாக்குப்பெட்டிகளை களவாடியபோது வாய் பேசாதிருந்த உலகம், வடமேல் மாகாணத்தில் நடைபெற்ற பட்டப்பகல் வாக்குக் கொள்ளைகளில் விறைத்துப்போனது. 32 பெட்டிகளை அபகரித்தவர்களே, 600 வாக்குப்பெட்டிகளை நீலக்கட்சிக்காடையர் அபகரித்துவிட்டனர் என ஓலமிடும் நகைமுரணிது. தேர்தல் பாதுகாப்பிற்கென அனுப்பப்பட்ட பாதுகாப்பு படையினரின் ஆயுதங்களை இரவல் வாங்கிய ஆளும் கட்சிக்காரர், வாக்குச் சாவடிகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து பல பத்து மணிக்குள் வாக்குப்பெட்டிகளை நிறைத்த வேகம் கண்டு சிங்கள மக்களே திகைத்துத்தான் போனார்கள். "ஆக மொத்தம் ஒரு ஐம்பதினாயிரம் கள்ள வாக்குகள் ஒரு 217 வாக்குச்சாவடிகளில் போடப்பட்டன. அதனாலென்ன" எனக்கூறும் ஸ்ரீலங்கா தேர்தல் ஆணையாளரைப் பார்த்து அழுவதா, சிரிப்பதா என்று எவருக்கும் தெரியவில்லை.

மோசடிகள் ஒருபக்கம். மறுபக்கமோ வன்முறைச் சூறாவளி. மனவக்கிரமும், விகாரமும் நிறைந்த உளநோயாளிகள் போல் அம்மையாரின் ஆட்கள் நடந்து கொண்டனர். ஒருபானை சோற்றுக்கு இருசோறு பதம். முதல் கதை – 28ம் திகதி நள்ளிரவில் குருநாகல் கட்டுப்பொத்தவில் நடைபெற்ற சம்பவமிது. ஐ.தே.கட்சி கூட்டமொன்றிற்கு சென்றுவிட்டு திரும்பிய ஒருவர் வழிமறிக்கப்பட்டு 5 × 3 அடி ஆழத்தில் தனது புதைகுழியை தானே அகழ வைக்கப்பட்டபின் சுடப்பட்டு எரிக்கப்பட்டு அடையாளம் தெரியாத நிலையில் புதைகுழிக்குள் வீசப்பட்டிருந்தார். வாரியப்பொல. கல்கமுவ பகுதிகளில் நடைபெற்ற விபரீதங்கள் கேவலமானவை. B. M. சந்திராவதி எனும் 50 வயதுப் பெண் பட்டப்பகலில் பலரும் பார்த்து நிற்க தனது ஆடைகளை தானே களைய நிர்ப்பந்திக்கப்பட்டு அம்மணமாக அடித்துதைக்கப்பட்டார். இதுபோல் வேறு இரு பெண்களும் இத்தகைய இழிநிலைக்குள்ளாக்கப்பட்டதாக தெரிகின்றது. மார்க்சியவாதியாக தோற்றம்காட்டி பெருமாளின் வடகிழக்கு மாகாணசபையில் அங்கம் வகித்து சிங்களப்பேரினவாதியாக அவதாரமெடுத்துள்ள தயான் ஜெயதிலக்க கூறுகின்றார். "சிங்களத்தின் அரசியல் முற்றிலும் இராணுவ மயப்படுத்தப்பட்டுவிட்டது. ஐ.தே.கட்சிக்கு எதிராக 'முழுமையான போரை' 'முழுமையான வலுவோடு' சந்திரிகா நடாத்திவிட்டார். புலிகளும் அரசாங்கமும் போரில் பயன்படுத்தும் T.56 சுடுகலன் வடமேல்மாகாணசபைத் தேர்தலில் அறிமுகமாகிவிட்டது – இதுவொரு புதிய பரிணாமம்" என்கிறார் தயான்.

இவ்வாறாக சிங்களம் தீராத சிக்கலில் சிக்கிக்கொண்டு முழிக்கையில், அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம், ஸ்கண்டிநேவிய நாடுகள் பெருத்த சிக்கலுக்குள் மாட்டிக்கொண்டு தவிக்கின்றன. சனநாயகம்– மனித உரிமைகள் பற்றி புலிகளுக்கு போதித்தவர்கள் இப்போது என்ன செய்யப்போகின்றார்கள்? "தேர்தல் முடிவுகள் குறித்து – மௌனம் கலைத்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் பின்வருமாறு கூறியது. "தேர்தல் வன்முறைகள், மோசடிகள் குறித்து இயல்பாகவே நாம் கவலைகொள்கின்றோம். சனநாயகத்திற்கு சுதந்திரமான தேர்தல்களே அடிப்படை. நாங்கள் CMEV, PAFFREL போன்ற தேர்தல் கண்காணிப்பு குழுக்களின் இறுதி அறிக்கைக்காக காத்து நிற்கின்றோம்." இக்குழுக்களின் அறிக்கைகள் இப்போது வெளியாகிவிட்டன. இவ்வறிக்கைகள் அம்மையாரின் ஆட்களின் பெருத்த கண்டனத்திற்கு உள்ளாகி அவர்களின் சீற்றத்தையும் தூண்டிவிட்டன. அத்தோடு சருவதேச ரீதியில் ஒரு இராசதந்திர முறுகல் நிலையையும் சந்திரிகா அரசுக்கு தோற்றுவித்துவிட்டன. எனவே இங்கே கேள்வி எழுகின்றது. யாரிந்த குழுக்களில் உள்ளவர்கள்? அவர்கள் என்ன சொன்னார்கள்?

சனநாயகத்தை காப்பாற்ற வரிந்துகட்டிக்கொண்டு களத்திலிறங்கியிருக்கும் மேற்குலகம் சிங்களத்தின் மாகாணசபைத் தேர்தல்களைக் கண்காணிக்க மூன்று அமைப்புக்களை ஊக்குவித்தன. இவற்றுள் PAFFREL எனப்படும் சுதந்திரமான நேர்மையான தேர்தலுக்கான மக்கள் செயலணி, CMEV எனப்படும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மையம் என்பன குறிப்பிடத்தக்கவை. முதல் அமைப்பின் நெறியாளராக கோட்பிறி குணதிலக்கவும் செயலாளராக கிங்ஸ்லி றொட்றிகோவும், மற்றைய அமைப்பில் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவும், கலாநிதி அர்யுனா பராக்கிரம போன்ற பலர் உள்ளனர். இவர்கள் எல்லாம் சிங்களத்தின் பிரபலமான அறிவாளர் வரிசையைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி இவர்களில் பலர் 1994களில் அம்மையாரின் ஆட்சியோடு தம்மை இனங்காட்டியவர்கள். இவர்கள் எல்லோரும் மிகத் தெளிவாக ஒருமித்த குரலில் கூறுகின்றனர். "சுதந்திரமான நேர்மையான தேர்தலொன்றிற்கான சகல குறைந்தபட்ச விதிகள்

(07ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

www.eelamview.com

"பிரபாகரனுக்கு வெற்றி உண்டாகட்டும்"

அமெரிக்காவின் பதினாறாவது சனாதிபதியாக 1860 – 65 இடையில் பதவி வகித்தவர் ஏபிரகாம் லிங்கன். அவர் அப்போது கூறிய கூற்றொன்று மிகப்புகழ்பெற்றது. ''சிலரை எப்போதும் ஏய்க்கலாம், எல்லோரையும் சிலவேளைகளில் ஏய்க்கலாம். ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏய்க்க முடியாது.'' அவரது பட்டறிவுப் பழமொழி இன்று புதுமொழியாக எவ்வளவு பொருந்தி வருகின்றது என்று பாருங்கள். இன்றைய எமது அரசியல் அகராதிப்படி ''சிலரை'' என்பது ''எற்றிற்குரியர் (என்னத்திற்குரியவர்) கயவர் ஒன்று உற்றக்கால் (ஏதேனும் நடந்தால்) விற்றற்குரியர் விரைந்து'' என்று வள்ளுவன் சொன்ன விற்றல் நிலையையும் தாண்டிவிட்டு, விற்பதற்கு தன்மானம் கூட அற்ற நிலையிலும் தமிழ் ''லேபல்'' ஒட்டிய தமிழ்க்குழுக்களைக் குறிக்கும். எல்லோரையும் என்பது அமெரிக்கா உள்ளிட்ட இதுவரை மனைவிழுங்கி மகாதேவன்களாக மெத்தனமாக இருந்த சருவதேசத்தையும் குறிக்கும். அப்படியானால் ஏய்ப்பவர் யாரென்பது நாம் சொல்லாமலேயே விளங்கும்.

இவ்வாறு திடீரென உலகிற்கு 'ஞானம்' உதிக்க காரணம் என்ன? அதுவொரு சிறிய தேர்தல்தான். ஆனால் அதன் விளைவுகளோ பாரிய தாக்கங்களை உருவாக்கிவிட்டன. கொழுகொம்பாக நினைத்துத்தான் அம்மையார் வடமேல் மாகாணசபைத் தேர்தலை நடாத்தினார். ஆனால் அது இன்று கொத்தும் பாம்பாகிவிட்டது. 25ம் திகதி காலை 7.00 மணிக்கு தேர்தல் தொடங்கி நான்கு நிமிடத்துக்குள்ளே அம்மையாரின் நாலுவருட ஆட்சி முழுமையாக அம்பலப்பட்டது. 2500 ஆண்டுகால மகாவம்ச பயங்கரவாதிகளின் உண்மைச்சொரூபம் 25ம் திகதி முற்றிலுமாக வெளியாகியது. 1981ஆம் ஆண்டு யாழ்மாவட்ட சபைத் தேர்தலில் அமைச்சர் காமினி தலைமையிலான காடையர் கூட்டம் 32 வாக்குப்பெட்டிகளை களவாடியபோது வாய் பேசாதிருந்த உலகம், வடமேல் மாகாணத்தில் நடைபெற்ற பட்டப்பகல் வாக்குக் கொள்ளைகளில் விறைத்துப்போனது. 32 பெட்டிகளை அபகரித்தவர்களே, 600 வாக்குப்பெட்டிகளை நீலக்கட்சிக்காடையர் அபகரித்துவிட்டனர் என ஓலமிடும் நகைமுரணிது. தேர்தல் பாதுகாப்பிற்கென அனுப்பப்பட்ட பாதுகாப்பு படையினரின் ஆயுதங்களை இரவல் வாங்கிய ஆளும் கட்சிக்காரர், வாக்குச் சாவடிகளை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்து பகல் பத்து மணிக்குள் வாக்குப்பெட்டிகளை நிறைத்த வேகம் கண்டு சிங்கள மக்களே திகைத்துத்தான் போனார்கள். "ஆக மொத்தம் ஒரு ஐம்பதினாயிரம் கள்ள வாக்குகள் ஒரு 217 வாக்குச்சாவடிகளில் போடப்பட்டன. அதனாலென்ன'' எனக்கூறும் ஸ்ரீலங்கா தேர்தல் ஆணையாளரைப் பார்த்து அழுவதா, சிரிப்பதா என்று எவருக்கும் தெரியவில்லை.

மோசடிகள் ஒருபக்கம். மறுபக்கமோ வன்முறைச் சூறாவளி. மனவக்கிரமும், விகாரமும் நிறைந்த உளநோயாளிகள் போல் அம்மையாரின் ஆட்கள் நடந்து கொண்டனர். ஒருபானை சோற்றுக்கு இருசோறு பதம். முதல் கதை – 28ம் திகதி நள்ளிரவில் குருநாகல் கட்டுப்பொத்தவில் நடைபெற்ற சம்பவமிது. ஐ.தே.கட்சி கூட்டமொன்றிற்கு சென்றுவிட்டு திரும்பிய ஒருவர் வழிமறிக்கப்பட்டு 5 × 3 அடி ஆழத்தில் தனது புதைகுழியை தானே அகழ வைக்கப்பட்டபின் சுடப்பட்டு எரிக்கப்பட்டு அடையாளம் தெரியாத நிலையில் புதைகுழிக்குள் வீசப்பட்டிருந்தார். வாரியப்பொல. கல்கமுவ பகுதிகளில் நடைபெற்ற விபரீதங்கள் கேவலமானவை. B.M. சந்திராவதி எனும் 50 வயதுப் பெண் பட்டப்பகலில் பலரும் பார்த்து நிற்க தனது ஆடைகளை தானே களைய நிர்ப்பந்திக்கப்பட்டு அம்மணமாக அடித்துதைக்கப்பட்டார். இதுபோல் வேறு இரு பெண்களும் இத்தகைய இழிநிலைக்குள்ளாக்கப்பட்டதாக தெரிகின்றது. மாக்சியவாதியாக தோற்றம்காட்டி பெருமாளின் வடகிழக்கு மாகாணசபையில் அங்கம் வகித்து சிங்களப்பேரினவாதியாக அவதாரமெடுத்துள்ள தயான் ஜெயதிலக்க கூறுகின்றார். ''சிங்களத்தின் அரசியல் முற்றிலும் இராணுவ மயப்படுத்தப்பட்டுவிட்டது. ஐ.தே.கட்சிக்கு எதிராக 'முழுமையான போரை' 'முழுமையான அளவோடு' சந்திரிகா நடாத்திவிட்டார். புலிகளும் அரசாங்கமும் போரில் பயன்படுத்தும் T. 56 சுடுகலன் வடமேல்மாகாணசபைத் தேர்தலில் அறிமுகமாகிவிட்டது -- இதுவொரு புதிய பரிணாமம்'' என்கிறார் தயான்.

இவ்வாறாக சிங்களம் தீராத சிக்கலில் சிக்கிக்கொண்டு முழிக்கையில், அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம், ஸ்கண்டிநேவிய நாடுகள் பெருத்த சிக்கலொன்றில் மாட்டிக்கொண்டு தவிக்கின்றன. சனநாயகம்- மனித உரிமைகள் பற்றி புலிகளுக்கு போதித்தவர்கள் இப்போது என்ன செய்யப்போகின்றார்கள்? ''தேர்தல் முடிவுகள் குறித்து – மௌனம் கலைத்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் பின்வருமாறு கூறியது. ''தேர்தல் வன்முறைகள், மோசடிகள் குறித்து இயல்பாகவே நாம் கவலைகொள்கின்றோம்.

- வே. பாலகுமாரன் -

சனநாயகத்திற்கு சுதந்திரமான தேர்தல்களே அடிப்படை. நாங்கள் CMEV, PAFFREL போன்ற தேர்தல் கண்காணிப்பு குழுக்களின் இறுதி அறிக்கைக்காக காத்து நிற்கின்றோம்.'' இக்குழுக்களின் அறிக்கைகள் இப்போது வெளியாகிவிட்டன. இவ்வறிக்கைகள் அம்மையாரின் ஆட்களின் பெருத்த கண்டனத்திற்கு உள்ளாகி அவர்களின் சீற்றத்தையும் தூண்டிவிட்டன. அத்தோடு சருவதேச ரீதியில் ஒரு இராசதந்திர முறுகல் நிலையையும் சந்திரிகா அரசுக்கு தோற்றுவித்துவிட்டன. எனவே இங்கே கேள்வி எழுகின்றது யாரிந்த குழுக்களில் உள்ளவர்கள்? அவர்கள் என்ன சொன்னார்கள்?

சனநாயகத்தை காப்பாற்ற வரிந்துகட்டிக்கொண்டு களத்திலிறங்கியிருக்கும் மேற்குலகம் சிங்களத்தின் மாகாணசபைத் தேர்தல்களைக் கண்காணிக்க மூன்று அமைப்புக்களை ஊக்குவித்தன. இவற்றுள் PAFFREL எனப்படும் சுதந்திரமான நேர்மையான தேர்தலுக்கான மக்கள் செயலணி, CMEV எனப்படும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மையம் என்பன குறிப்பிடத்தக்கவை. முதல் அமைப்பின் நெறியாளராக கோட்பிறி குணத்திலக்கவும் செயலாளராக கிங்ஸ்லி றொட்ரிகோவும், மற்றைய அமைப்பில் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவும், கலாநிதி அர்யுனா பராக்கிரம போன்ற பலர் உள்ளனர். இவர்கள் எல்லாம் சிங்களத்தின் பிரபலமான அறிவாளர் வரிசையைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி இவர்களில் பலர் 1994 களில் அம்மையாரின் ஆட்சியோடு தம்மை இனமும் காட்டியவர்கள். இவர்கள் எல்லோரும் மிகத் தெளிவாக ஒருமித்த குரலில் கூறுகின்றனர். ''சுதந்திரமான நேர்மையான தேர்தலொன்றிற்கான சகல குறைந்தபட்ச விதிகள்

(07ஆம் பக்கம் பார்க்க)

கொழுகொம்பாக நினைத்துத்தான் அம்மையார் வடமேல் மாகாணசபைத் தேர்தலை நடாத்தினார். ஆனால் அது இன்று கொத்தும் பாம்பாகிவிட்டது. 25ம் திகதி காலை 7.00 மணிக்கு தேர்தல் தொடங்கி நாலு நிமிடத்திற்குள்ளே அம்மையாரின் நாலு வருட ஆட்சி முழுமையாக அம்பலப்பட்டது. 2500 ஆண்டு கால மகாவம்ச பயங்கரவாதிகளின் உண்மைச்சொருபம் 25ம் திகதி முற்றிலுமாக வெளியாகியது.

www.eelamview.com

www.eelamview.com

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியன்-பியன்-பூ-...

செல்லவேண்டும். இதற்கு வசதியாகச் சில ஏற்பாடுகளைச் செய்தோம். இரண்டு நீள மூங்கில்தடிகளை பயன்படுத்தினோம். ஒன்றைக் 'காரியரில்' வைத்துக்கட்டினோம். மற்றையதை கான்டிலுக்கு சமாந்தரமாக சீற்றின் பின் பகுதியில் வைத்துக்கட்டினோம். அதிகபாரம் ஏற்றவும் - சமநிலையுடன் பிடித்து உருட்டவும் அவை பயன்பட்டன. அத்துடன் சைக்கிளை இலை - குழைகளால் உருமறைப்புச் செய்யவும் மூங்கில்தடிகள் பயன்பட்டன.

பாரம் தாங்காது முதல்நாளே ரயர்-ரியூப்புகள் வெடித்தன. இதற்கு மாற்றுவழியொன்று செய்தேன். எனது காக்கி 'ரவுசரை' கிழிந்து கிழித்து - அதைக்கொண்டு ரியூப்பை சுற்றிக்கட்டி அதிக அழுத்தத்தில் காற்றை அடித்தேன். இந்த பரிசோதனை பூரண வெற்றியைத்தந்தது. எனது அணியினர்க்கு இதை அறிமுகப்படுத்தினேன். அதன்பின்னர் எமது அணியினர் அனைவரினதும் ரவுசர்கள் கட்டைக்காற்சட்டையாக சுருங்கியது.

காட்டுப்பாதை தொடர்ச்சியான குன்றுவீச்சிற்கு உள்ளாவதால் நாங்கள் ஒற்றையடிப்பாதைகளூடாகவே பிரயாணம் செய்தோம். ஒரு கிலோ அரிசியை களமுனைக்கு எடுத்துச்செல்ல நாலுகிலோ அரிசியை கொண்டுசெல்பவருக்கு செலவிடவேண்டியிருந்தது. அவ்வளவு தூரப்பிரயாணம். நெருப்பால் எழும் புகை விமானங்களை வரவழைத்துவிடும் என்பதால். ஆரம்பநாட்களில் சமைக்காத உணவையே உட்கொண்டோம்'' என அந்த வழங்கல் பொறுப்பாளர் பூரிப்புடன் கூறியிருந்தார்.

உருக்குயானைகள் படையணி :

இதேவேளை, முற்றுகைத்தாக்குதலுக்கு வேண்டிய கனரக ஆயுதங்களான ஆட்டிலறிகள் - பீரங்கிகளை சத்தமின்றி பகைத்தளத்துக்கு அருகேயுள்ள சுடுதளங்களுக்கு எடுத்துவர உடல்வாகு கொண்ட ஆண்களை ஜெனரல் ஜியாப் அவர்கள் தெரிவு செய்து - அணியாக்கினார். இவர்களுக்கு உருக்குயானைகள் படையணி என அவர் பெயர்சூட்டினார்.

தியன்-பியன்-பூ தளத்திலிருந்து சுமார் 100 கிலோமீற்றர்கள் தூரம்வரை இந்த கனரக ஆயுதங்களை வாகனங்களும் மற்றும் மிருகங்களைப் பயன்படுத்தியும் போராளிகள் நகர்த்தினர். எஞ்சிய 100 கிலோமீற்றர்களையும் உருக்கு யானைப்படையணியினரே சுடுதளத்துக்கு கொண்டுவந்தனர்.

சரமாரியான வான்தாக்குதல்கள் தீமூட்டும் 'நேபாம்' எறிகுண்டுத் தாக்குதல் மற்றும் எறிகணைவீச்சுக்களுக்கு ஈடுகொடுத்து ஆட்டிலறிகளை கயிறுகளால் பிணைத்து அங்குலம் அங்குலமாக மலைப்பாங்கான நிலத்தில் இழுத்து சுடுதளத்திற்கு கொண்டுபோயினர்.

1954 மார்ச் 12 ம் திகதி மாலைவேளை, போராளிகள் முற்றுகைச் சமரைத் தொடக்கினர். சுமார் 100 மோட்டார்களை ஒரே சமயத்தில் இயக்கிய போராளிகள் தளம்மீது குண்டுமழை பொழிந்தனர். சமர் தொடங்கி 15 நாட்களின்பின்னர் தியன் - பியன் - பூ தளத்துடனான வழங்கல்தொடர்பை பிரான்சியப் படைத்தலைமை இழந்தது.

பிரான்சியப்படைகள் தளத்தைவிட்டு பின்வாங்கி ஓடி - தப்புவதை தடுக்கும் வகையில், பெரும்படை ஒன்றை நகர்த்திய - ஜெனரல் ஜியாப் அவர்கள் - தடுப்பு நடவடிக்கைகளை அமைத்திருந்தார். இதனால், தப்பியோடவும் முடியாது. அதேவேளை சரணடைந்து பெருந்தொகை ஆயுதகளபாடங்களை போராளிகளுக்கு வழங்கிரும்பாததாலும் அழிவுக்கான சமரை பிரான்சியப்படைகள் தொடர்ந்தன.

இதேசமயம் வியட்நாம் நிலைமை உட்பட அன்றைய பனிப்போர் நிலைமை பற்றிய வல்லரசுகளின் மாநாடொன்று ஏப்ரல் மாதத்தில் நடைபெற இருந்தது. இந்த மாநாடு தொடங்குமுன்னர் தளத்தைக்கைப்பற்ற ஜியாப் முயன்றார். அதன்மூலம் ஒரு அரசியல் வெற்றியையும் ஈட்ட பாடுபட்டார். ஆயினும், மாநாடு நடந்துமுடிந்து சில வாரங்களின்பின்னரே தளத்தைக் கைப்பற்றினர். எனினும் கணித்ததுபோல அரசியல் வெற்றியையும் ஈட்டியிருந்தார்.

சமரின் ஒரு கட்டத்தில் வியட்நாம் போராளிகள் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டு - திணறினர். பிரான்சியரின் வான்தாக்குதல் மற்றும் எறிகணைவீச்சுக்களால் பெரும்பாதிப்புக்களை போராளிகள் சந்தித்தனர்.

பிரச்சனைக்கு புதிய வழியொன்றைக் கண்டறிந்த ஜியாப்பிற்கு அதை நடைமுறைப்படுத்த சாதாரண மக்களே கைகொடுத்தனர்.

தளத்தின் மையப்பகுதியை குறிவைத்து பல பக்கங்களால் நீண்டதூர பதுங்ககழிகளை அமைப்பித்தார் ஒருசில நாட்களில் சுமார் 250 கி.மீற்றர்கள் நீளமான பதுங்ககழிகளை மக்கள் வெட்டிக்கொடுத்தனர். இவற்றைப்பயன்படுத்தி நகர்ந்த போராளிகள் தமது உயிரிழப்புக்களைக் குறைத்தபடி பகைத்தளத்தின் மையப்பகுதிவரை நகர்ந்து- தாக்கி தளத்தைக் கைப்பற்றியிருந்தனர்.

55 நாட்கள் நடந்த இந்த முற்றுகைச்சமரில் மூவாயிரம் பிரான்சியத் துருப்புக்கள் கொல்லப்பட்டனர். மேலும், மூவாயிரம் பேர் அங்கவீனர்களாகினர். சுமார் எண்ணாயிரம் துருப்புக்கள் கைதிகளாகினர். இவர்களை பலநூறு மைல்களுக்கு அப்பால் இருந்த சிறைச்சாலைகளுக்கு போராளிகள் நடத்திக் கூட்டிச்சென்றனர். இந்தப்பயணத்தின்போது கைதிகளில் அரைப்பங்கினர் நோய்கள் காரணமாக இறந்துவிட்டனர். இதேவேளை, வியட்நாம் தரப்பில் போரில் ஈடுபட்ட போராளிகள் மற்றும் மக்களில் சுமார் எண்ணாயிரம்பேர் பலியாகியிருந்தனர். தியன் - பியன் - பூ வீழ்ச்சியை தொடர்ந்து வந்த விளைவுகளால் பிரான்சியப்படைகள் வியட்நாமைவிட்டு வெளியேறின. ○

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரபாகரனுக்கு ..

யாவும் மீறப்பட்டுவிட்டன. மக்கள் சுதந்திரமாக தமது வாக்குகளை பயன்படுத்த முடியாத அச்சமும் குழப்பமும் கலந்த சூழல் தோற்றுவிக்கப்பட்டது. முன்னைய காலத்தில் ஐ.தே. கட்சி நடத்துகொண்ட அநாகரிகமுறையை நாம் மறக்கவில்லை அதைவிட மோசமாக அல்லது

குறைவாக பொதுசன முன்னணி நடந்ததா இல்லையா என்பதல்ல இந்தப்பிரச்சனை. 1994ம் ஆண்டு தேர்தலின்போது கொடுக்கப்பட்ட சகல வாக்குறுதிகளையும் மீறி மக்களுக்கு இக்கட்சிகள் யாவும் துரோகமிழைத்து விட்டன. எனவே தேர்தல் முடிவுகள் இரத்துச் செய்யப்பட்டு மீள்வாக்களிப்பு நடைபெறவேண்டும்.'' உண்மையில் தேர்தலை இரத்துச் செய்யவே இவர்கள் பரிந்துரைத்தபோதும் அதற்கான வழிமுறை யாப்பில் இல்லாததால் இவ்வாறு இவர்கள் கூறநேரிட்டது.

CMEV எனப்படும் அமைப்போ மிக மோசமான வன்முறைச் சம்பவங்கள் யாவற்றையும் பட்டியலிட்டு அதற்குப் பொறுப்பானவர்களையும் இனம்காட்டியது. லக்ஸ்மி விக்கிரமரத்தின, D. M. ஜெயரத்தின, ஜெயராஜ் பெர்னாண்டோ பிள்ளை, ஜீவன்குமாரதுங்க, அமரசிறி தொடங்கொட, நந்தமித்திர ஏக்கநாயக்க போன்ற அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நேரடியாகவே தேர்தல் மோசடி, வன்முறைகளில் ஈடுபட்டதாக இவர்களது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது. இவர்களது அறிக்கைகளை முற்றாக நிராகரித்து இவர்களை எதிர்க்கட்சிகளின் எடுபிடிகள் என அம்மையாரின் அமைச்சர்கள் சேறு வீச முற்பட்டபோதே சிக்கலெழுந்தது. ஏனெனில் வீசப்பட்டசேறு தம்மீதும் விழுந்தபோது உதவி நாடுகள் திடுக்கிட்டன. ஏனெனில் அமெரிக்காவின் ஆசிய பவுண்டேசன், சுவீடனின் SIDA போன்ற பிரபல சருவதேச அமைப்புக்களின் முழுமையான ஆதரவோடுதான் தேர்தல் கண்காணிப்புக்குழுக்கள் செயற்பட்டன. இதேவேளை கதிர்காமரின் வெளிவிவகாரஅமைச்சோ இராசதந்திர வியன்னா விதிகளை இவர்கள் மீறியதாக குற்றம்சாட்டி, இறைமையும், தன்னாதிக்கமும் உள்ள ஸ்ரீலங்காவின் உள்நாட்டு விவகாரத்தில் இவ்வாறு மூக்கை நுழைக்கக் கூடாதென கண்டனமும் எச்சரிக்கையும் கலந்த தொனியில் இந்நாடுகளுக்கு அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது.

உடனடியாகவே கொழும்பிலுள்ள மேற்குலக இராசதந்திரிகள் தமக்கு நெருங்கிய செய்தியாளர்களூடாக அரசுக்கு ஏளனத்தொனியில் செய்தியொன்றை அனுப்பினர் ''எல்லாவற்றிற்கும் நம் உதவி வேண்டும். இதில் மட்டும் நாம் தலையிட முடியாதா'' எனக் கேட்டு "சிங்களத்தின் அரசியல் யாப்பின் முதலாவது இயலின் மூன்றாவதை ஞாபகப்படுத்துகின்றோம்'' என குத்தல் மொழியிலமைந்த செய்திதான் அது. ஸ்ரீலங்கா அரசுக்கு இறைமை இருந்தாலும் அந்த இறைமை மக்களிடமே பாரப்படுத்தப்பட்டுள்ளது. இறைமை என்பது ஆட்சித்தத்துவங்கள், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை, ஆகியவற்றை உள்ளடக்கும் என்கிறது அரசியல் யாப்பு. இத்தோடு இவர்கள் விடவில்லை. வரும் யூன் - யூலை மாதங்களில் பாரிசில் நடைபெறவிருக்கும் ஸ்ரீலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டமைப்புக்கூட்டத்தில் ''கவனித்துக்கொள்கின்றோம்'' என்றும் பொருமியுள்ளார்கள்; இதனாலே இம்மாத முதல்வாரத்தில் சருவதேச உதவியில் வெட்டுவிழும் எனத்தலைப்பிட்டு தலைப்புச் செய்திகள் வெளியாகின.

அம்மையாரின் இன்றைய நிலை சிங்களத்திலே இவ்வாறுதான் உள்ளது என சிங்களவர் மனநிலையைக் கணிப்பவர் கருதுகின்றனர். இதுவரை நடைபெற்ற (1931 இருந்து) தேர்தல்களில் மிகமோசமான தேர்தல் இதுதான். இதன்மூலம் சந்திரிகா சனநாயகத்தை தூக்குக் கயிற்றில் தூக்கிவிட்டார்.

சனநாயகம் எனும் சவப்பெட்டிக்கு கடைசி ஆணி அடித்து குரியக்கந்தை செம்மணி புதைகுழிகளுக்கு அனுப்பிவிட்டார் என்பதே. இப்போது நடப்பவை யாவற்றையும் பார்த்து எம் மக்கள் மௌனித்திருக்கின்றார்கள். தமிழர்களை வதைத்து கொல்வது இறைமை, தன்னாதிக்கமுள்ள நாட்டின் உள்விவகாரம். வடமேல் மாகாணத்தில் வாக்கு கொள்ளையிடுவது சருவதேச விவகாரம். இது உலகின் முடிவு. ஆனால் சிங்கள மக்களின் முடிவு என்ன தெரியுமா? தமது சார்பில் சந்திரிகாவை எதிர்ப்பதற்கு- பாடம்புகட்டுவதற்கு ஏற்றவர் பிரபாகரனே. எனவே அவர்கள் ''பிரபாகரனுக்கு வெற்றி உண்டாகட்டும்'' என ஒப்பொலிக்கின்றார்கள். ○

www.eelamview.com

www.eelamview.com

வெறியாட்டுப் படலம்

வசந்தபுரம் கரும்புத்தோட்டப்பகுதி. வாய்க்கால் கரையோரத்தில் பச்சையாய் மண்டிய பற்றைக்கருகில் - ஒரு குடும்பம் வாழ்தல் சாத்தியமா என்ற பரிதாபக் கேள்வி எழுப்பும் ஒரு அகதிக்குடிசை. அதைக் குடிசை என்பதே அதிகம். உண்மையில், நாங்கள் சின்னஞ்சிறு வயதில் அம்மா - அப்பா விளையாடுவதற்கு கட்டுகின்ற கொட்டிலைப்போல அது மோசமாக இருக்கிறது. ஆனால், அதற்குள்ளும் ஒரு வாழ்வு நடக்கிறது.

ஒவ்வொருநாளும் அந்தக் கொட்டிலில் உலை கொதிப்பதில்லை, ஆனால் தான்தவறாமல் அங்கு வாழும் ஐந்து சீவன்களின் வயிறுகளும் கொதிக்கும். பகலெல்லாம் கபகபவென்று குடலைப் பற்றியெரியும் பசித்தீயை, இரவு சாக்குகின்ற கஞ்சியும் - நித்திரையும் தணித்துவிடும். பகலெல்லாம் பற்றியெரியும் கனவுகளோடு பசித்தீச்சுவாலைகள் நீறுபூக்கும். "நீண்ட இரவு விடியாமலே இருந்து விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்" அந்தக் குடும்பம் நினைத்துக்கொள்ளும். ஆனால் பகல், இரவையும் - இரவு, பகலையும் தின்னுவதை நிறுத்துவதில்லையே!

இலட்சமி அம்மா ஒரு தொய்வுநோயாளி. தொய்வு கண்டுவிட்டால் அம்மாவிற்கு மரண அவஸ்தைதான். கண் பிதுங்கி, தொண்டை நரம்புகள் புடைத்து, வயிறு முதுகோடு ஒட்டுமளவிற்கு, இழுப்பு அம்மாவைப் பாடாய்ப்படுத்தும். நாளாந்த நிகழ்வானாலும் பிள்ளைகள் பரிதவித்துப் போவார்கள். அவர்களால் என்னதான் செய்யமுடியும்? அத்தனையும் பிஞ்சுகள்!

இலட்சமி அம்மாவிற்கு கரும்புத்தோட்டத்தில் கூலி வேலை. தினக்கூலி அறுபது ரூபா. எல்லா நாட்களிலும் வேலை இருப்பதில்லை. வேலையுள்ள நாட்களில் கஞ்சியும், வேலையில்லாத நாட்களில் வெறும்வயிறுமாய், அம்மாவின் உழைப்பை மட்டுமே நம்பிய பட்டினிச்சீவியம் அவர்களுடையது.

இலட்சமி அம்மாவின் குடும்பம் வறுமைக்கு உதாரணமாய் வாழ்ந்ததல்ல. ஜெகநாதன் இலட்சமியைக் கைபிடித்த மறுவருடத்தில் அவர்களின் முதல் இடப்பெயர்வு நிகழ்ந்தது. அது 1973ஆம் வருடம். கண்டியிலிருந்து வன்னிக்கு. இங்கு வந்து குழந்தை குட்டிகள் என்று குடும்பம் பெருகி, கமம்செய்து - கூலித்தொழில் பார்த்து அவர்கள் நன்றாகத்தான் வாழ்ந்தார்கள்.

அந்தக் குடும்பத்தின் ஆரவாரப்பாட்டமற்ற அமைதியான வாழ்வை நிலைகுலைத்துச் சிதைத்தது ஒரு இடப்பெயர்வு. சத்ஜய இடப்பெயர்வும் அதனைத் தொடர்ந்த குடும்பத்தின் மூத்தஉயிர்களின் இழப்புகளுமே இலட்சமி அம்மாவையும் சின்னஞ்சிறுசுகளான நான்கு பிள்ளைகளையும் யாருமேயற்ற நிர்க்கதி நிலைக்குத் தள்ளின.

ஜெகநாதன் - இலட்சமி தம்பதியினருக்கு ஒன்பது பிள்ளைகள். இலட்சமி அம்மாவின் இரண்டு பெண்களும் ஒரு மகனும் திருமணம் முடித்து விட்டிருந்தார்கள். அம்மாவின் தாய்மைப் பாத்திரத்தில் இரண்டுவகை. ஒன்று பிள்ளைகளின் தாய், இன்னொன்று, போராளியின் தாய். அம்மாவிற்கு போராளித்தாய் என்ற பெருமையைக் கொடுத்தவன் மகேந்திரன் - கடற்புலி சிறையஞ்சன். யாழ்ப்பாணத்தில் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை நடந்து கொண்டிருந்தபோது (1995) மகேந்திரன் இயக்கத்திற்கு நடந்தான்.

ஆனையிறவும் படைத்தளத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பரவிய சிங்கள இராணுவ இயந்திரத்தின் சத்ஜய படைச்சக்தி. வன்னிப்பெருநிலத்தின் ஒருபெரு நகரையும் நகர்சார்ந்த கிராமங்களையும் விழுங்கியது.

பாரதிபுரத்திலிருந்து - அவர்கள் வாழ்ந்த, அவர்களோடு வாழ்ந்த எல்லாவற்றையும் இழந்து - இலட்சமி அம்மாவின் குடும்பம் பொன்னகருக்கு இடம்பெயர்ந்தது.

சத்ஜய படைச்சக்தியின் இரண்ட மையமாகிய கிளிநொச்சிப்படைத்தளம், தன்னைச்சுற்றிலும் தூரத்தே ஒடுங்கியிருந்த குடியிருப்புகளை எல்லாம் அச்சுறுத்தியபடி திமிர்பூத்துக்கிடந்தது.

படைத்தளத்திற்கும் படைத்தளத்தைக் கண்காணிக்கும் விடுதலைப்புலிகளின் காவலரண்வரிசைக்கும் இடைப்பட்ட மனிதசூனியப் பிரதேசத்திற்குள் இருக்கும் கிராமங்களைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்கள், தங்கள் வீடுகளுக்குச் சென்று பொருட்கள் எடுத்துவருவதை வழக்கமாக்கிக்கொண்டிருந்தார்கள். கிளிநொச்சிப் பகுதியில் வீடு பார்க்கச் சென்றவர்கள், வெட்டுண்ட பிணங்களாக கண்டெடுக்கப்படும் நிகழ்வுகள் மலிந்திருந்தபோதும், தங்கள் வயிற்றுத்தேவைகளின் போதாமையைச் சமாளிக்க அவர்களுக்கு அதைத்தவிர வேறுவழி இருக்கவில்லை.

செத்துப்போகும் கணம்வரைக்கும் நான் சாகமாட்டேன் என்று நினைத்திருப்பதுதானே மனிதஇயல்பு. தங்களுக்கு எதுவும் நடக்காது. இராணுவத்தின் கொலைக்கரங்களில் சிக்காமல் நாங்கள் தப்பிவிடுவோம். என்ற நம்பிக்கையோடு எல்லோருமே வீடு பார்க்கச் சென்று வந்தார்கள். நம்பிக்கைதானே வாழ்க்கை. அதை அவர்கள் கடைப்பிடித்தார்கள். ஆனால், இந்த விடயத்தில், சில நம்பிக்கைகள் வீண்போகவில்லையாயினும் பல நம்பிக்கைகள் பிணமாய்த்தான் போயின.

வீடு பார்க்கச் சென்றுவரும் இந்த வழக்கமான நிகழ்வொன்றின்போதுதான், தனக்கு மூன்று பேரப்பிள்ளைகளைத் தந்த தனது மூத்த மகன் இராஜேந்திரனை இலட்சமி அம்மா இழந்தாள்.

சம்பவதினம், இராஜேந்திரனும் இலட்சமி அம்மாவின் இளையமகன் சசிக்குமாரும் வீட்டுக்குச் சென்றிருந்தார்கள். காடுமண்டி மயானவெறுமைசூழ அநாதையாய் நின்றிருந்த தங்கள் வீட்டில், இருவரும் காரியங்களில் ஆழ்ந்திருந்தார்கள்.

பற்றைகளுக்குள்ளிருந்து சத்தமற்று வெளியேறிய சிங்களப்படையாட்கள் சகோதரர்கள் இருவரையும் சூழ்ந்தனர். திகைத்து, நாக்கு மேலண்ணத்தில் ஒட்டி ஒருபேச்சும்வராது சகோதரர்கள் இருவரும் கையெடுத்துக் கும்பிட்டார்கள். சிங்களப்படைக்கு தமிழர்கள் எல்லோருமே புலிகள்தானே! புலி புலியென்று கத்தியபடி சாடைக்கும்பல் இருவரையும் நையப்புடைத்தது.

சசிக்குமாரை ஒரு மரத்தோடு சேர்த்துக் கட்டிவிட்டு இராஜேந்திரனைக் கதறக் கதறக் கொண்டு போனார்கள். உச்சஸ்தாயியில் உருவெடுத்த அவனது அவலக்குரல் தேய்ந்து, தேய்ந்து சற்றைக்கெல்லாம் அடங்கிப்போனது. கட்டோடு போராடி - தன்னை விடுவித்துக்கொண்டு இரத்தமும் கண்ணீருமாய் அம்மாவிடம் வந்துசேர்ந்தான் சசிக்குமார்.

கயிறு சிராய்த்து, மரம் சிராய்த்து, இராணுவச் சப்பாத்து மிதித்து, இரத்தவிளாறாகி வந்துநின்ற பிள்ளையைப் பார்த்து விக்கித்துநின்றாள் அம்மா. "என்னய்யா கோலமிது, எந்த குஞ்ச ஆரய்யா இந்தப்பாடுபடுத்தினது" பிள்ளையின் கண்டல் காயங்களையும் சிராய்ப்புக் காயங்களையும் தடவியவாறு அம்மா பதறினாள்.

இதற்குப் பதில் சொல்லிவிடலாம். ஆனால், "அண்ணா எங்கையப்பு" என்று அம்மா கேட்கப்போகும் அடுத்த கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது? சசி திணறிக்கொண்டிருந்தபோது அம்மா அதைக் கேட்டாள் "அண்ணா எங்கையப்பு." சசி மௌனமாய் அழுதான். அம்மாவிற்கு அபத்தமாய் ஒரு சந்தேகம் பொறிதட்டியது. முகத்தில் கலவரம் படர, பதிலொன்றும் கூறாமல் கண்ணீர்வழிய வழிய பேயறைந்தவன்போல் நின்ற பிள்ளையின் தோள்களைப்பற்றி உலுக்கி அம்மா கத்தினாள் "அண்ணா எங்கையடா."

- எஸ். உமாஜிப்ரான் -

அதற்குமேலும் தாயின் தவித்த நிலையைத் தாங்கமுடியாமல் "அண்ணையைக் கொண்டுபோயிற்றாங்கள் அம்மா" என்றபடி தாயின் மடியைக் கட்டிக்கொண்டு கதறினான் சசி. அம்மா இடிவிழுந்தவள் போனாள்.

இராஜேந்திரனைக் கட்டியவள் மனஞ்சுருண்டு நொருங்கிப்போனாள். பொட்டழியும் வயதா அவளுக்கு! பட்டப்பகலிலும் காலம் இருண்டதாய் உணர்ந்தாள். செத்துப் போவதை சுவாமியிடம் போய்விட்டதாகச் சொன்னால் நம்புகின்ற வயதுப் பிள்ளைகள், அப்பா சுவாமியிடம் போய்விட்டதாக நம்பினார்கள்.

அவர்கள் இழவு செய்யவில்லை. ஆனால் ஒரு இழவுவீட்டுக்கும் அவர்களின் வீட்டுக்கும் எந்த வித்தியாசமும் இருக்கவில்லை.

இது நடந்த பிற்பாடு வீட்டுப்பக்கம் செல்வதை அவர்கள் அறவே தவிர்த்துவிட்டார்கள். ஆனால், நாட்கள் செல்ல, அயலவர்கள் போய்வருகின்ற தைரியத்தில் மீண்டும் வீட்டுக்குச் சென்றுவர ஆரம்பித்தார்கள்.

இராணுவ அர்த்தத்தில் மனிதசூனியப்பிரதேசம் என்பதற்கு மரணப்பொறி என்ற பொருள்விரிவும் உண்டு. வெறும் தேங்காய்க்கும் முருக்கங்காய்க்கும் - பாத்திரம் பண்டத்திற்குமா மக்கள் தங்கள் உயிர்களை அந்த மரணப்பொறிக்குள் நுழைகின்றார்கள்? இல்லை! வீடுபார்க்கவென்று அவர்கள் புறப்படும்போது ஒரு ஆதிபந்த உறவைப் பார்க்கப்போகும் ஆவலும் சுறுசுறுப்பும் அவர்களைத் தொற்றிக்கொள்கிறது. ஒரு குடும்பத்தின் இன்பம் - துன்பம் என்ற இரண்டு முதன்மை உணர்வுகளிலும் முதலில் பங்கெடுத்துக்கொள்வது வீடுதானே! அதுதானே அவர்களின் முதல் உறவு. அந்த உறவு அவர்களுக்கு எல்லாமுமாக இருக்கிறது. வீட்டுக்குச் சென்று - முற்றத்தில் நடந்து, திண்ணையில் சரிந்து, கிணற்றில் குளித்து, இடம்பெயர்ந்த வாழ்வின் அவலச்சுமைகளை இறக்கி வைத்துவிட்டு- அந்த உறவோடு வாழ்ந்த இன்பமான பொழுதுகளை நெஞ்சில் கிளர்த்தி மனதை இலேசாக்கி மீள்கிறார்கள். இங்கே, உயிரைவிடவும் அந்த உறவுதரும் ஆறுதல் பெரிதாய் இருப்பது ஆச்சரியமல்ல. உயிரையும் பொருட்படுத்தாது ஆறுதலைத் தேடுமளவிற்கு மனங்களைச் சிதைக்கும் இடப்பெயர்வு வாழ்வின் அவலங்கள்தான் ஆச்சரியமானவை.

அன்றும் (03.05.1996) அப்படித்தான்; அப்பாவுடன் சசிக்குமாரும் புவனேஸ்வரியும் பாரதிபுரத்திற்குச் சென்றார்கள். வீட்டுவளவிற்குள் அவர்கள் நுழைந்தவுடன்- எங்கிருந்து முளைத்தார்களோ தெரியாது - முப்பதுக்கு மேற்பட்ட சிங்களப்படையாட்கள் அவர்களை மொய்த்துக்கொண்டார்கள்.

பத்துவயதுச் சிறுமியான புவனேஸ்வரியையும், அவளைவிட நான்கு வயதுகள் அதிகமான சசிக்குமாரையும், அவர்களின் முதிய தந்தையையும் இராணுவத்தினர் புலியென்று சொல்லி வதைத்தார்கள். கைகளை முதுகுப் புறமாகச் சேர்த்துக்கட்டி ஒரு பற்றை மண்டிய பகுதிக்கு அழைத்துப்போனார்கள். அங்கே, பாரதிபுரத்தில் புவனேஸ்வரியின் வீட்டிற்கருகில் வசித்தவரான கணேஸ்

(9ம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

www.eelamview.com

என்பவரை (மூன்று
பிள்ளைகளின் தந்தை)
குரூரமனப் பட்டாளம்
அடித்து நொருக்கிப்
போட்டிருந்தது.
எல்லோரையும் ஒன்றாக
இருத்திவிட்டு இராணுவக் கும்பல்
தனது வழமையான
வெறியாட்டத்திற்குத்
தயாரானது.

இனவெறியேறிய மிருகங்கள் -
விளங்காத பாசையின்
இடையிடையே விளங்கும்
கொச்சைத்தமிழ் -
முரட்டுக்கத்திகள் - இவையெல்லாம்
சுருக்கின் கூர்நக விரல்களில்
சிக்கியிருக்கும்
கோழிக்குஞ்சுகளாய்
வதங்கியிருந்த நான்கு
கையறுநிலை உயிர்களுக்கும்
அவர்களின் அவலமுடிவைத்
தெரிவித்துவிட்டன.
உடல்கசிந்த குருதியுலர்ந்து
விகாரமாய்த் தெரிந்த
முகங்களை ஒருவரையொருவர்
பாவமாய்ப் பார்த்தார்கள்.

ஒரு இராணுவத்தினன்
அப்பாவின் கைக்கட்டவிழ்த்து
பற்றை மறைவுக்கு
கூட்டிப்போனான்.
புவனேஸ்வரியின் மிரண்ட
விழிகள் அப்பா சென்று மறைந்த
பற்றையை ஏக்கமும்
அச்சமுமாய் துளாவின.
இராணுவச்சப்பாத்துக்கள்
தெரிந்தன. தோளில்
இருந்த துவாய்த்துண்டை
விரித்து அப்பா
படுப்பதும் தெரிந்தது. அப்பாவின்
முகத்தில் அசாதாரண
அமைதி. அப்பாவின்
ஏக்கவிழிகள் பிள்ளைகள்
இருந்த திசையை ஒருதடவை
பார்த்தன. அதன்பிறகு
அப்பாவின் தலையை
ஒருவன் நிலத்தோடு சேர்த்து
அழுத்திப்பிடிப்பது
மட்டும்தான் தெரிந்தது.
சொற்பநேரத்தில் அவர்கள்
மட்டுமே திரும்பிவந்தார்கள்.
அப்பா திரும்பப்
போவதில்லை என்பதை
அவர்கள் கைகளிலிருந்த
முரட்டுக்கத்திகளின்
குருதிச்சொட்டுகள் சொல்லின.

அப்பாவைக்
கொன்றுவிட்டார்கள்.
அப்பா பாவம். பிள்ளைகளுக்காக
மாடாய் உழைத்த அப்பா.
உயிர்பிரியும் இறுதிக்கணத்திலும்
பிள்ளைகள் உயிர்தப்பிவிட
வேண்டும் என்றுதான் அப்பா
நினைத்திருப்பார். இருந்த
நிலையில் நிலத்தோடு
சரிந்து பிள்ளைகள் இருவரும்
அழுதார்கள். புவனேஸ்வரிக்கு
அப்பாவைப் பார்க்க
வேண்டும்போல் இருந்தது.
அப்பாவை அவர்கள்
குற்றுயிராய் விட்டுவந்திருந்தால் —
அப்பா "தண்ணி — தண்ணி"
என்று கேட்பதுபோல்
பிரமைதட்டியது.
ஆனால், எழும்பிப்போக
தைரியமில்லை அவளுக்கு.
சுற்றிலும் கொடிய
சர்ப்பங்களும் பொருந்திய
மனிதர்கள். சற்று
அசைந்தாலும் தன்னையும்
கொன்றுவிடுவார்களென்று -
சாவுக்கஞ்சி அந்தப்
பிஞ்சுப்பெண் கேவிக்
கேவி அழுதபடி கிடந்தாள்.

ஒரு வெறியாட்டுப்
படலத்தை முடித்த பின்னும்
அங்கிருந்து நகரும்
எண்ணம் அந்த இராணுவக்
கும்பலுக்கு இருக்கவில்லை.
பொழுது இருண்டு
மயானக்கிலி பரவத்தொடங்கியது.
புவனேஸ்வரியின்
அழுகையை கொச்சைத்தமிழில்
அதட்டியவாறு -
கைக்கட்டுகளை அவிழ்த்துவிட்ட
ஒரு இராணுவ வெறியன்
மூவருக்கும் உணவுப்பொதி
கொடுத்தான்.
அப்பாவைக் கொன்ற
இரத்தக்கைகளால் பிள்ளைகளுக்கு
உணவுகொடுக்கும்
குரூரப்பரிகாசம். இதுதான்
சிங்கள பௌத்தம்!



புவனேஸ்வரி: இரத்தமும் கண்ணீருமாய் பத்துவயதுப் பிள்ளை மனதில் துயரவடு விழுத்திய அந்தக் கொடியஇரவு புவனேஸ்வரியைப் பொறுத்தவரை விடியவே இல்லை. அதன் இருள் இன்னமும் அவள் மனதைக் கப்பியிருக்கிறது!

உப்புப் புளி இல்லாத
பண்டமும் சுவையாகத் தெரியும்
பசி அவர்களுக்கு. ஆனாலும்
எப்படிச் சாப்பிடுவார்கள்?
வீட்டில் பிணங்கிடக்கும்போது
அடுப்பில் உலையேற்றாத
பாரம்பரியமல்லவா
எங்களுடையது! அதுவும்
இங்கே, கண்ணுக்கு முன்னால்
கொடூரச்சாவடைந்து
கிடப்பது அவர்களின்
குருதிமூலமல்லவா! தங்களை
ஊட்டிவளர்த்த அப்பா
பிணமாகக்கிடக்கும்போது
பசி ஒரு குறையாகவா
இருக்கும் பிள்ளைகளுக்கு.

அந்த மரணப்பொழுது
மெதுமெதுவாய்
கழிந்துகொண்டிருந்தது.
புவனேஸ்வரிக்குப பக்கத்தில்வந்து
சம்மணமிட்டு அமர்ந்தான்
ஒரு படையினன்.
துப்பாக்கிக் கத்தியை எடுத்து
விரல்தடவி அதன்
கூர்மையைப் பரிசோதித்தவாறு
அவளிடம்
கொச்சைத்தமிழில்
பேச்சுக்கொடுத்தான்.

அவளின் வலதுகையைப்
பிடித்து கட்டைவிரலில்
கத்தியால் மெதுவாகக் கீறியபடி
கேட்டான் "பாப்பாவுக்கு
புலி தெரியுமா?"
சாவை மிக அருகில் உணர்ந்த
அவளுக்கு ஒரு பதிலும்
சொல்லவரவில்லை.
பெருவிரலில் வலிதெறிக்க
அவளின் அழுகை வலுத்தது.
"பாப்பா அழவேணாம்.
பயம் வேணாம். நாளைக்கு
பாப்பா வீட்ட
போகலாம்" சொல்லியவன்,
இப்போது அவளின்
வலதுகை மணிக்கட்டில்
இரத்தவரிகளைக் கீறினான்.
அழுதால்
தன்னைக்கொன்றுவிடுவான்
என்ற பயத்தில்
அழுகையை மென்றுவிழுங்கி
வலியை முனகினாள்
புவனேஸ்வரி.

மூன்று உயிர்களையும்
மெதுமெதுவாய் உயிர்வதை
செய்தே இரவைக்
கழித்துக்கொண்டிருந்தது
இராணுவக்கும்பல்.
இரையபக்கிக்கொள்ளுமுன்
பூனையின் முன்விளையாட்டுகளால்
வதையுறும் சுண்டெலியின்
நிலையிலிருந்தார்கள்
மூவரும்.

அதிகாலை மூன்று மணியளவில்
அந்த இராணுவக்கும்பல்
புறப்பட ஆயத்தமானது.
தங்களை உயிர்பிழைக்க
விட்டுப் போகப்போகிறார்கள்
என்று இவர்கள் நினைக்க-
கத்திகள் முளைத்த கைகளுடன்
அவர்கள் சூழ்ந்தனர்.

சாவு தங்களை
அண்மிப்பதைத் தெரிந்துகொண்ட
மூன்று சிவன்களும்
கையெடுத்துக் கும்பிட்டு,
கண்ணீர் பெருக்கி,
கால்பிடித்துக் கெஞ்சிக்
கதறக் கதற
வெட்டினார்கள் வெறியர்கள்.
ஒருகத்தி சசிக்குமாரின் கழுத்தில்
மிக ஆழ இறங்கியது.
பீறிப்பாய்ந்த குருதி
வெட்டியவனின் முகத்திலும்
வழிந்தது. இன்னொருவனின்
கத்தி கணேஸ் அண்ணாவின்
கழுத்தைப் பிளந்தது.
புவனேஸ்வரியின் கழுத்தில்
கத்தி இறங்கும்போதே
எதேச்சையாக கத்தியின்
விசையை எதிர்காது
அதன் விசையோடுசேர்ந்து
அவளும் விழுந்தாள்.
கழுத்திலிருந்து குருதி வழிந்தது.
ஆனால், உயிர் வழிந்துவிடவில்லை.
அசைவெதையும் காட்டாது
விறைத்துக் கிடந்தாள்.

தங்களின் தேர்ந்த
வெட்டுகளில் நம்பிக்கை
மிகக் கொண்டு-இரண்டாவது
வெறியாட்டுப் படலத்தையும்
முடித்துக்கொண்டு
வெறிக்கூச்சல் எழுப்பியபடி
அங்கிருந்து அகன்றது
இராணுவக்கும்பல்.

சிங்களக்கூச்சல்
தூரவிலகும்வரை பொறுத்திருந்து
தலையைத்தூக்கி அருகில்கிடந்த
உடல்களிரண்டையும் தடவி
அண்ணனைக் கண்டுபிடித்து
அசைத்துப் பார்த்தாள்.
அவனில் ஒரு சலனமுமில்லை.
புவனேஸ்வரிக்கு கழுத்திலிருந்து
குருதி வழிந்து சட்டை
தெப்பலாகியிருந்தது.
தலையைச்சுற்றியது. தொண்டை
வரண்டு தண்ணீர் விடாய்த்தது.
எழுந்து உட்கார்ந்து கணேஸ்
அண்ணனை
அசைத்துப்பார்த்தாள்.
உயிரசைவு தெரிந்தது.
தன்னைச் சமாளித்துக்கொண்டு
எழுந்து கணேசண்ணனின்
தலையைப்பிடித்து
நிமிர்த்தினாள். வலுவின்றி
தலை வெளித்து விழுந்தது.
அண்ணனுக்கு அருகில்
அமர்ந்து தோளைப்பிடித்து
நிமிர்த்த முயன்றாள்.
முகம் அவளது
முதுகுபார்க்கத் திரும்பியது.
அவனது கழுத்து ஏறக்குறைய
துண்டித்தநிலையில் இருந்தது.
எந்தச் சந்தேகமும் இல்லாமல்
அண்ணன் இறந்துவிட்டிருந்தான்.
புவனேஸ்வரி தன்
ஆசையண்ணனைத்
தடவித்தடவி அழுதாள்.
திக்குகள் தெரியாமல்
மூடியிருந்த இருளுக்குள் அடுத்து
என்ன செய்வது என்று
அந்தக் குழந்தைப் பெண்ணுக்குப்
புலப்படவேயில்லை.

அப்பா கிடந்த பற்றையையும்
அண்ணனையும்
மாறிமாறிப் பார்த்தாள்.
மீண்டும் அழுகை
பொத்துக்கொண்டு வந்தது.
அப்பாவையும் அண்ணனையும்
அநாதைப் பிணங்களாக
விட்டுப்போக அவளால்
முடியவில்லை. ஆனால் அந்த
இராணுவக் கும்பல் திரும்பவும்
வந்துவிடுமோ என்ற
சாவச்சம் அவளை
அங்கிருந்து துரத்தியது.

நம்பிக்கையை
வரவழைத்துக்கொண்டு தன்
பலம்முழுவதையும் பிரயோகித்து
கணேசண்ணனைத் தூக்கி
நிமிர்த்தினாள். தன் அண்ணனின்
சாரத்தைக் கிழித்து
அவரது கழுத்துக்கும் தனது
கழுத்துக்கும் கட்டுப்போட்டாள்.
கணேசண்ணனின் தலை
வெளித்துக் வெளித்து விழுந்தது.
அவரால் அசையக்கூட
முடியவில்லை. ஆனால்,
புவனேஸ்வரி விடாப்பிடியாகநின்று
அவரைத் தூக்கிநிறுத்தி-
ஆதரவாக அணைத்துப்பிடித்து
நடத்தி - புலிகளின் காவலரண்
ஒன்றுக்கு கொண்டுவந்து
சேர்த்தாள்.

இரத்தமும் கண்ணீருமாய்
பத்துவயதுப் பிள்ளைமனதில்
துயரவடு விழுத்திய அந்தக்
கொடிய இரவு புவனேஸ்வரியைப்
பொறுத்தவரை விடியவே இல்லை.
அதன் இருள் இன்னமும்
அவள் மனதைக்
கப்பியிருக்கிறது!

www.eelamview.com

வாழ்வான் தமிழன் இல்லையேல் .... விடுதலைக்காக வீழ்வான் தமிழன்!

உலைக்களம்

- வியாசன்

பாரதைப்பீதேறிப் பரவியேவந்த
பகைவரைத் தடுத்தனர் புதல்வர்.
தேளக்காற்றில் தீயெழ வந்தோர்
திகைத்திடப் பொருதனர் மகளிர்.
பூதலம் வியந்து போனது; வீரம்
புணர்ந்திட நின்றது தாய்மண்.
மாதவம்செய்த மண்ணடா அள்ளி
மார்பினிற் பூசடா தமிழா.

* * *

எத்தனைக்கென்றுதான் அழுவதெம் வாய்கள்.
எத்தனை காலத்துக்கு நீரிறைப்பது கண்கள்.
சீறிச்சீறியே மூக்குகள் சிவந்து போயின.
சோகம் கீறிய கோடுகள் முகத்திலும்
வேகம் ஆறிய கால்கள் நிலத்திலுமாக
சடமாய் நடக்கின்றன எம்உடல்கள்.
கேள்விக்குறியாய் வளைந்தோமெனினும்
நாளைக்கு நாமேதான் பதிலென்பதில் வெகுசந்தோஷம்.
தவின உலகிருந்து எட்ட இருந்தாலும்
கால நீரோட்டத்தில் கால்கழுவி
வாழாப் பிறவிகளெனினும்
விடுதலையின் திசையில் கிட்டவுள்ளோமென்பதில்
மெத்தமகிழ்ச்சி.
பசியால் நிறைந்துளது வயிறு
எமக்கிப்போ பசிப்பதேயில்லை.
ஊரிபூறி வெளியே பெருகி
நயனக்கேணறுகள் வற்றடைந்துவிட்டதால்
எமக்கிப்போ கண்ணீரே வருவதில்லை.
சாவும் நாமும் ஒரேபடுக்கையிற்தான் சயனம்.
ஆம்; சாவெமக்குச் சகஜமாகிவிட்டது.
எமன்பயம் கூட எமக்கில்லை.
என்னதான் நடந்துவிடும்?
மிஞ்சிமிஞ்சிப்போனால் உயிர்போகலாம்.
அடட அதற்கேன் அச்சமுற வேண்டும்.
"போகுமுயிர் இந்தப் பொன்னாட்டின் விடுதலைக்காய்
போகுமெனில் அந்தப் புனிதங்கள் கோடிபெறும்."
இங்கே உச்சரித்துக்கொள்ளும் ஒவ்வொரு வாயும்
தத்தெடுத்துக்கொண்டது இந்த வரிகளைத்தான்.
மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை முன்மொழிந்தோம்.
வழிமொழிய வேண்டியவர்கள் வாயடைத்துப் போனார்கள்.
சமாதானத்துக்கான சாளரங்களை விரித்தோம்
சமருக்கான களங்களையே அவர்கள் விஸ்தரிக்கின்றனர்.
போரைநிறுத்திப் பேசலாம் வருக என்றால்
பசியெடுத்து போனதால் பணிந்து போகுறோமென
எண்ணியும். எகத்தாளமுமாக
எரிவார்த்தைகளைக் கொட்டுகின்றனர்.
போரற்ற நூற்றாண்டைக் கனவினைந்தோம்
போருக்கான ஆண்டெனப் பிரகடனம் செய்துள்ளனர்.
குருஷேத்திரத்திற்குத் தேதிகுறித்து
சேனாதிபதிகள் திக்விஜயமும புறப்பட்டுவிட்டனர்.
எதிரிக்கு எதிரி எனக்கு நண்பனென
ஒநாய்களை அழைத்து உபசாரம் செய்கின்றனர்.
சரி; அவர்களுக்காயினும் சரியாசனம் கொடுத்தார்களா?
தாழ்வாரத்தில் வைத்துத்தானே சாப்பாடு போடுகின்றனர்.
புலிகளை அழிப்பது தமிழரை அழிப்பதே என
சரியாகத் தெரிந்துகொண்டது சந்திரிகா அரசு.
கொழும்பில் "சுதிர்காமமகரிஷி" யை வைத்து
"அராஜகஆச்சிரமம்" நடத்துகின்றார் அரசி.
கண்களைக் கத்தியாற் தோண்டுவதுதானே குற்றம்
வைரவரால் குத்துவிப்பது எப்படிக் குற்றமாகும்?
வித்தைபயிற்றவர்கள் விளையாடுகின்றனர்.
பாவம் செய்த தமிழனே!
உனக்கெவர்தான் பரிதாபப்படுவரோ?
தமிழனைப் பகைவழித்த சம்பவம் இடையாதே
தமிழனைத் தமிழனழித்த கதைதானே
தமிழர் வரலாறு.
அது இன்றும் தொடர்கிறது.
தொழும்வாழ்வு அற இன்றாயினும் எழுந்தாயே
தரும் இது.
புலியான வாழ்வே உனக்குப் பெருமைதந்தது.

அடிமாடாய்க் கிடந்தபோது யாருன்னை மதித்தார்?
உழக்கிச் சென்றனர் எல்லோரும்.
புலியெனத்தலை நிமிர்த்திய பின்னரே
உன்னை ஒளிவட்டம் சுற்றிக்கொண்டது.
நேற்றுவரை உனக்கு என்ன பெருமை?
காற்றில் சருகான சிறுமை.
கேட்டுப்பார் யாருன்னைக் கணக்கெடுத்தார்?
மலேசியாவில் கூலி
சிங்கப்பூரில் சித்தாள்
ஆபிரிக்காவில் அடிமை
பர்மாவில் துரத்தப்பட்ட வேண்டாதான்.
இத்தனை கோடிபேர் இருந்தும்
இந்தியாவில் மட்டும் என்னவாம்.
ஆரியனுக்கு அடிமைதானே.
கோயில்கட்டி கும்பாபிஷேகம் நடத்தியபோதும்
நீ வாசலுக்கு வெளியே நின்றுதானே வணங்கினாய்.
உன் யானைப்பலமறியாது நசிந்தாய்,
ஆரியன்தானே ஆண்டான்.
இலங்கையிலாவது துலங்கினாயா? ...... இல்லை
காலத்துக்கு காலம் காலால் மிதிபட்டும்
வருடமொருதடவை வதைபட்டும்.
புலியாகுமட்டும் நீ பிச்செறியப்பட்டாய்.
பின்னர்தானே பேசும் பொருளானாய்.
இன்று உலகெங்கும் உனக்கு வேர்கள்
வையப்பரப்பெங்கும் இன்றுனக்கு வாய்கள்.
தளத்தில் "வெல்வோ" மென்ற நம்பிக்கையுடனும்
புலத்தில் "தோற்கவிடோம்" என்ற துணிவுடனும்
எல்லோரும் ஒன்றான ஒருவாழ்வு துளிர்க்கிறது.
சாவுவரினும் வரட்டும்
போகும் திசைமட்டும் மாறாதென்று
சின்னஞ்சிறு வன்னியே! சிலிர்த்து நிற்கின்றாய்.
உன்நிமிர்ந்த வாழ்வைத்தானே நிலமெல்லாம் பேசுகிறது.
எவரெவர் காலையெல்லாம் தழுவிச்செல்கிறது காற்று.
காற்றை எவராவது கணக்கெடுத்தார்களா?
புயலாக மையம்கொண்டபோது மட்டும்
வானொலி வாய்களெல்லாம் அலறுகின்றன.
அடங்கிக்கிடந்தபோது தமிழனையெவரும் ஆதரிக்கவில்லை.
கழிவுவாய்க்கால் கழுவும் ஒருவனாக
கரிமண்டிக்கிடக்கும் அருவருத்த பொருளாக
காலதொடக்கூடக் கூசும் பிண்டமாகத்தானே கருதினர்.
இன்றுனக்கு எத்தனை பெரியவாழ்வு.
புலியென்றால் தமிழனென்றுரைக்கிறது புதிய அகராதி.
தமிழனென்றால் புலியென அலறுகிறது சந்திரிகா அரசு.
திசைக்கொன்றாய் உன்னுறவுகள் சிதைந்தபோதும்
தமிழனென்றதும் தசையாடுகிறது.
மூச்சாக நாமிருப்போம் முன்னேறுங்களென்று
புலத்திலிருந்து வரும் குரல்கள் புல்லரிக்க வைக்கிறது.
போதுமடா உனக்கிந்தப் பெருமை.
உலகமெங்கும் தமிழன் உன்னால் நிமிர்ந்தான்.
அவர்களாலேயே நீ அலங்கரிக்கப்படுகின்றாய்.
நேற்று வன்னிக்கொரு வரலாறிருந்தது.
இன்றும் இருக்கின்றது.
நாளையும் இருக்கும்.
வாழ்ந்தான் தமிழனென்ற வரலாறு வேண்டும்
இல்லையேல்
விடுதலைக்காகப் போராடி
வீழ்ந்தான் என்றாவது சொல்லி வீசட்டும் காற்று.
அகலத்திற கதவை.
வருவது உறவானால் வரவேற்போம்.
பகையேவரினும் வரட்டும்.
கொல்லைப்புறத்தில் குழியிலிடுவோம்.

* * *

ஊரெலாம் தீயில் உழன்றனவெனினும்
உயர்ந்தன தமிழரின் தலைகள்.
வேரறுந்தாடி விழுந்தன மரங்கள்
வியப்புறும்படி யடிமண்ணிற்
பீறின தளிர்கள்; போகங்கெட்டதனைத்தும்
பூத்தன; தீயின்வாயுண்டு
நீறின யாவும் நிமிர்ந்தன பசிய
நிலவென வானது தாய்மண்.

www.eelamview.com